# கத்தோலிக்க திருமறை

## தரம்

## 4

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2018
இரண்டாம் பதிப்பு - 2019

*எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.*

ISBN 978-955-25-0053-4

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
கருணாரத்ன அன்ட் சன்ஸ்
65C, தள்கஹாவில வீதி, மிடெல்லமுளஹேன, ஹொறன.
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

*ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நல்லெழில் பொலி சீரணி*
*நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா*
*ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்*
*நறுஞ்சோலை கொள் லங்கா*
*நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்*
*நமதுதி ஏல் தாயே*
*நம தலை நினதடி மேல் வைத்தோமே*
*நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதாரருள் ஆனாய்*
*நவை தவிர் உணர்வானாய்*
*நமதேர் வலியானாய்*
*நவில் சுதந்திரம் ஆனாய்*
*நமதிளமையை நாட்டே*
*நகு மடி தனையோட்டே*
*அமைவுறும் அறிவுடனே*
*அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதார் ஒளி வளமே*
*நறிய மலர் என நிலவும் தாயே*
*யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த*
*எழில்கொள் சேய்கள் எனவே*
*இயலுறு பிளவுகள் தமை அறவே*
*இழிவென நீக்கிடுவோம்*
*ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி*
*நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

நீங்கள் பிறந்திருப்பது இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படக்கூடிய ஒரு நாட்டிலாகும். உங்கள் நாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது ஒரு சிறிய நாடாகத் தென்பட்டாலும் அதன் பெறுமதி விலைமதிப்பற்றதாகும். இவ்வாறான பெருமிதமிக்கதொரு மண்ணில் பிறந்துள்ள நீங்கள் அனைவரும் உண்மையிலேயே அதிஷ்டசாலிகள். மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் நன்கு கல்வி கற்று நற்குணமும் அறிவும் சக்தியும்மிக்க பிரசைகளாகி, எதிர்கால உலகை ஒளியூட்டுவீர்கள் என்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பை அடைவதற்குக் கல்விக்கான சகல வசதிகளையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே இந்நூலையும் அது உங்களுக்கு வழங்குகின்றது.

ஆரம்பப் பிரிவுப் பாடத்திட்டத்திற்கேற்ப இதுவரைக்கும் தரம் 1, 2, 3, 4 இற்கான புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு தரம் 5 இற்கான புதிய பாடநூல்களின் அறிமுகத்துடன் ஆரம்பப் பாடத்திட்ட மறுசீரமைப்பு எனும் இக்கட்டம் நிறைவு பெறுகின்றது. தரம் 1 முதல் தரம் 5 வரை கற்கும் ஆரம்பப் பிரிவு மாணவருக்காக அரசு ஏறக்குறைய 30 வகையான பாடநூல்களைத் தயாரித்து வழங்குகின்றது. இவ்விலைமதிப்பற்ற வளத்தினைப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமானதாக ஆக்கிக் கொள்வது உங்கள் அனைவரினதும் கடமையாகும்.

இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க - கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்**

டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி - ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாளர்**

அ. குலரத்தினம் - உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**ஆலோசனை**

மேதகு கலாநிதி ஒக்ஸ்வெல்ட் கோமிஸ் ஆண்டகை (ஓய்வு நிலை).

மேதகு கலாநிதி மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை.

அருட்பணி பியால் ஜானக பர்ணாந்து - தேசிய இயக்குனர்,
தேசிய கத்தோலிக்க திருவிவிலிய
மறைக்கல்வி மத்திய நிலையம்,
கொழும்பு - 8.

**பதிப்பாசிரியர் குழு**

அருட்பணி ஏ. ஆர். எல். சாந்திகுமார் IVD

- விரிவுரையாளர்
அக்குவினாஸ் கல்லூரி, பொரளை

அருட்பணி எஸ். அன்ரனி பொன்சியன் OMI

- விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

அருட்பணி எல். பிரதீப் குமார் நிரோசன் பர்ணாந்து

- விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

அருட்சகோதரி மரிய ரங்கனி - ஆசிரியர்
றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம்
கொட்டாஞ்சேனை.

திருமதி பீ.டி.எவ். பிலீசியா - ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்வி பணிமனை, வத்தளை.

**எழுத்தாளர் குழு**

| | | |
|---|---|---|
| *தி.ஜெ.போல் அன்ரனி* | - | *அதிபர், ஓய்வு நிலை.* |
| *ஏ. கே. எஸ். ஏஞ்சல் மேரி* | - | *ஆசிரியர் ஓய்வு நிலை.* |
| *நிர்மலா ரத்நாயக்க* | - | *ஆசிரியர்*<br>*புனித பேதுரு கல்லூரி*<br>*கொழும்பு 4.* |
| *சீ. அயிரங்கனி றுட்றிகோ* | - | *ஆசிரியர்*<br>*புனித லூசியா மகா வித்தியாலயம்* |

**மொழிப் பதிப்பாசிரியர்**

| | | |
|---|---|---|
| *ஏ. எஸ். செல்வராஜா* | - | *ஆசிரியர்*<br>*சாந்த அந்தோனியார் கல்லூரி*<br>*கொழும்பு 2.* |

**சரவை பார்ப்பு**

| | | |
|---|---|---|
| *ரீ. ஐ. ரங்கநாயகம்* | - | *ஆசிரியர்*<br>*புனித அந்தனீஸ் மகளிர் மகா வித்தியாலயம்*<br>*கொள்ளுப்பிட்டி.* |

**படங்கள்**

| | | |
|---|---|---|
| *கே. ஏ. எஸ். களுபோவில* | - | *விரிவுரையாளர்*<br>*ஹாப்பிட்டிகம தேசிய கல்லூரி*<br>*மீரிகம* |

**அட்டைப் படம்**

| | | |
|---|---|---|
| *பீ. சுசில் ஜயசாந்த பெரேரா* | - | *சித்திரக் கலைஞர்* |

**கணினி வடிவமைப்பு**

| | | |
|---|---|---|
| *நிரோஷனி தேவநாயகம்* | - | *கணினி வடிவமைப்பாளர்*<br>*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.* |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கிறிஸ்தவப் பிள்ளை இறைவனின் கொடையாகும் | 1 |
| 2. | ஒப்புரவு அருளடையாளம் | 6 |
| 3. | என் இதயத்தில் எழுந்தருளுகின்ற இயேசு | 11 |
| 4. | பொறுப்புகளை நிறைவேற்றுவோம் | 15 |
| 5. | திறமைகளுக்கும் ஆற்றல்களுக்கும்இறைவனுக்கு நன்றி கூறுவோம் | 18 |
| 6. | சக்கேயுவின் மனமாற்றம் | 21 |
| 7. | பேரிரக்கமுள்ள இறைதந்தை | 24 |
| 8. | அதி உன்னத இறைதந்தையோடு பேசுவோம் | 27 |
| 9. | இறைவனோடு அன்பில் இணைவோம் | 29 |
| 10. | பரிந்துரையும் - திருமண வைபவமும் | 32 |
| 11. | இயேசுவின் அளவற்ற இரக்கம் | 35 |
| 12. | அடிமைத்தனத்திலிருந்து விடுதலை | 38 |
| 13. | புனித வியாழன் | 42 |
| 14. | அன்பின் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம் | 45 |
| 15. | தூய்மையாக வாழ்வோம் | 47 |
| 16. | இறைதந்தையின் அன்பிற்குப் பிரதியன்பு காட்டுவோம் | 50 |
| 17. | பல்வேறு முறையில் சான்று பகர்வோர் | 54 |
| 18. | இயேசுவின் சிறிய மலரான புனித சின்னத் திரேசா | 57 |
| 19. | புனித டொமினிக் சாவியோ | 60 |
| 20. | மேதகு தோமஸ் கருதினால் குறே ஆண்டகை | 62 |
| 21. | மோசே | 65 |
| 22. | இறைவாக்கினர் சாமுவேல் | 68 |
| 23. | இறைவாக்கினர் எலியா | 71 |
| 24. | அரசனான தாவீது அரசன் | 74 |
| 25. | புனித பேதுரு | 77 |

# 1 கிறிஸ்தவப் பிள்ளை இறைவனின் கொடையாகும்

இயேசு எங்களைச் சந்திக்கின்ற ஏழு சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நாங்கள் அருளடையாளங்கள் என அழைக்கின்றோம்.




உரு 1.1 ஏழு அருளடையாளங்கள்


இலவச விநியோகத்திற்காக

நிர்மலனும் அவரது தாயாரும் அமலனின் திருமுழுக்குச் சடங்கில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்பும் வேளையில்,

நிர்மலன் : அம்மா! நான் இன்று நல்ல மகிழ்ச்சியாய் உள்ளேன். எமது சமயப் பாடத்திலும் ஏழு அருளடையாளங்களில் முதலாவது அருளடையாளம் பற்றியே நாளை கற்பிக்க உள்ளனர்.

அம்மா : அப்படியா? அமலன் திருமுழுக்குப் பெற்றமை உமக்கு நல்ல அனுபவமாகும்.

நிர்மலன் : அம்மா அமலனின் தலையில் மூன்று முறை நீர் ஊற்றியது ஏன்?



உரு 1.2 தலையில் நீர் ஊற்றுதல்

அம்மா : எங்களது சென்ம பாவம் பிதா, சுதன், தூய ஆவியின் பெயரால் கழுவப்படுவதைக் குறிக்கின்றது.



உரு 1.3 புனித எண்ணெய் பூசுதல்

நிர்மலன் : அம்மா! அப்படியானால் அமலனின் தலையில் குருவானவர் எதனைப் பூசினார்?

அம்மா : அது புனித எண்ணெய் ஆகும். இதன் வழியாகத் தூய ஆவியின் அருள் எமக்குக் கிடைக்கின்றது.



உரு 1.4 வெள்ளை ஆடை அணிவித்தல்

நிர்மலன் : அமலன் மீது ஒரு வெள்ளை நிற ஆடையை அணிவிப்பதையும் கண்டேன். கோவிலில் உள்ள பெரிய பாஸ்கா மெழுகுவர்த்தியிலிருந்து மெழுகுவர்த்தி ஒன்றைக் கொளுத்துவதையும் கண்டேன். அம்மா இவை எல்லாவற்றிற்கும் விளக்கம் இருக்கின்றதா?





உரு 1.5 பாஸ்கா மெழுகுவர்த்தி

அம்மா : ஆம் மகனே! வெள்ளை நிற ஆடை அணிவிப்பதன் வழியாகத் தூய்மை அடையாளப்படுத்தப்படுகின்றது. பாஸ்கா மெழுகுவர்த்தியிலிருந்து மெழுகுவர்த்தியைக் கொளுத்துவதன் மூலம் அக்குழந்தை கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றுக்கொள்கிறது.

நிர்மலன் : அம்மா! இறைவனுடைய பிள்ளையாக இருப்பதால் நாம் பேறுபெற்றவர்கள் அல்லவா?

அம்மா : ஆம் மகனே, நாம் அனைவரும் மிகவும் பேறுபெற்றவர்கள்.




கிறிஸ்து திருமுழுக்குப் பெற்ற சந்தர்ப்பத்தில் இறைதந்தை கூறிய வார்த்தைகள்

"என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்." (மாற்கு 1 : 11)

### செபம்

அன்பான இறைதந்தையே! இன்றைய தினத்தில் தம்பி அமலன் இறை பிள்ளையாக கிறிஸ்துவைச் சந்திப்பதற்கும் அவருடைய அன்பைப் பெறுவதற்கும் நீர் கொடுத்த சந்தர்ப்பத்திற்காக உமக்கு நன்றி கூறி புகழ்கின்றோம்.

ஆமென்.

### ஒப்படை

1. முதல் முறையாகப் பெறுகின்ற அருளடையாளத்தின் பெயரை எழுதுங்கள்.
2. கீழே காணப்படும் படங்களுக்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்தெடுத்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

(1)




(2)



(3)



(4)



(பாவம் கழுவப்படல்/ தூய ஆவியின் அருள் கிடைத்தல்/ தூய்மை அடையாளப்படுத்தப்படல்/ இறைவனுடைய பிள்ளையாக ஒளிர்தல்)

# 2 ஒப்புரவு அருளடையாளம்

ஒப்புரவு அருளடையாளம் ஏழு அருளடையாளங்களில் ஒன்றாகும். இந்த அருளடையாளத்தின் வழியாக நாம் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

கிறிஸ்து உயிர்த்த தினத்தன்று மாலை வேளையில் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைத் திருத்தூதர்களுக்கு வழங்கினார். அப்போது அவர் கூறிய வார்த்தைகளைக் கீழே காணலாம்.

''எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா.''
புனித யோவான் 20 : 23

பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைத் திருத்தூதர் வழியாகப் பெற்றுள்ள குருவானவர் எமக்குப் பாவ மன்னிப்பு அளிக்கிறார்.

**ஒப்புரவு அருளடையாளத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள்.**

- ★ பாவசங்கீர்த்தனம்
- ★ பாவ மன்னிப்பு வழங்கும் அருளடையாளம்
- ★ மீண்டும் உறவு கொள்ளும் அருளடையாளம்
- ★ பச்சாத்தாப அருளடையாளம்

நாம் முதல் முறையாக நற்கருணை பெறுவதற்கு முன் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறவேண்டும். அவ்வாறே, பாவம் செய்யும் ஒவ்வொரு தடவையும் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறவேண்டும்.

பாவ மன்னிப்புக்கு முன்

பாவ மன்னிப்புக்குப் பின்



உரு 2.1 பாவமன்னிப்பிற்கு முன்னும் பின்னும் நடைபெறும் செயல்கள்

இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றாமல் இருப்பதும் பத்துக் கட்டளைகளை மீறுவதும் பாவமாகும். எமது சிந்தனை, சொல், செயல், கடமையில் தவறுதலும் பாவமாகும். பாவம் செய்வதற்குக் காரணமான ஏழு தலையாய பாவங்கள் உள்ளன. அவற்றைக் கீழே காணலாம்.


அகங்காரம் | பேராசை | காம இச்சை | கோபம்

பொறாமை | போசனப்பிரியம் | சோம்பல்

இத்தலையாய பாவங்களைச் செய்யும்போதும் பத்துக் கட்டளைகளை மீறும்போதும் நாம் இறைவனை விட்டுத் தூர விலகிச் செல்கின்றோம். அவ்வாறு விலகிச் செல்லும் நாம் மீண்டும் இறைவனோடு உறவுகொள்ள ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு நாம் செய்த பாவங்களை எல்லாம் நினைவுகூருவதும் அவற்றிற்கு உண்மையாக மனம் வருந்துவதும் முக்கியமாகும்.

**ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கு நாம் ஆயத்தம் செய்யும் முறை:**



ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதனால் நாம் பெறும் அருள்கள்.

- இறை உறவு ஏற்படுதல்
- செய்த பாவங்களுக்கு மன்னிப்பு பெறுதல்
- ஆன்மீக அமைதியும் சுதந்திரமும் கிடைத்தல்
- மகிழ்ச்சி ஏற்படுதல்
- புது வாழ்வு பெறுதல்



## செபம்

இறைதந்தையே! சிந்தனை, சொல், செயல், கடமையில் தவறியதால் செய்த எல்லாக் குற்றங்களையும் நாம் விளங்கிக் கொண்டு பாவச் சந்தர்ப்பங்களில் இருந்து விலகி வாழ்வதற்கு வரம் தந்தருளும்.

ஆமென்.



## ஒப்படை

1. இயேசு பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை யாருக்கு முதல் வழங்கினார்?
2. இந்நற்செய்திப் பகுதியிலுள்ள இடைவெளிகளை நிரப்புங்கள்.
   "............. பாவங்களை நீங்கள் ..............அவை ................ எவருடைய ............ மன்னிக்காதிருப்பீர்களோ அவை ..............."
3. கீழ்க் காணப்படும் சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவப் பிள்ளையாக நீங்கள் செயற்படும் விதத்தினைத் தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| 1. ஒதுக்கப்பட்ட நண்பரைக் காணும்போது | • உணவு கொடுத்தல் |
| 2. செய்யாத குற்றத்திற்கு தண்டனை பெறும்போது | • தவறை உணர்த்துதல் |
| 3. மிருகங்களை துன்புறுத்தும் ஒரு நண்பனைக் காணும்போது | • பொறுமையுடன் இருத்தல் |
| 4. பசியுடன் இருக்கும் ஒரு நண்பனைக் காணும்போது | • நண்பராதல் |

**செயற்பாடு**

மனனஞ் செய்யுங்கள்.

ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கான ஒழுங்குமுறை

1. பிதா, சுதன், தூய ஆவியின் பெயராலே ஆமென். தந்தையே பாவியான என்னை ஆசீர்வதியும்.
2. இது எனது முதலாவது பாவசங்கீர்த்தனமாகும். *(குருவானவரிடம் பாவங்களை கூறுதல்)*
3. "தந்தையே! ஞாபகத்தில் இருந்த பாவங்கள் இவையாகும். இவற்றிற்கும் மறந்துபோன பாவங்களுக்கும் மன்னிப்பும் பரிகாரமும் அளித்தருளும். *(குருவானவர் வழங்கும் அறிவுரைகளுக்கும் பரிகாரங்களுக்குப் நன்றாகச் செவிமடுத்த பின் உத்தம மனஸ்தாபச் செபத்தைச் சொல்லுதல்.)*
4. பிதா, சுதன், தூய ஆவியின் பெயராலே ஆமென். நன்றி தந்தையே! இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# 3 என் இதயத்தில் எழுந்தருளுகின்ற இயேசு

பரலோக பூலோக மன்னாவே
சீவியம் தரும் தூய அப்பமே
பாவிகள் நாங்கள் உம்மை
வணங்கி ஆராதிக்கின்றோம்.



உரு 3.1 இறுதி இராவுணவு

"இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்....." (லூக் 22 : 19)

அருட்தந்தை : பிள்ளைகளே, இப்படத்தை முன்பு கண்டுள்ளீர்களா? இவ்வார்த்தைகளையும் கேட்டுள்ளீர்களா?

பிள்ளைகள் : ஆம் தந்தையே, இயேசு இறுதி இராவுணவை ஏற்படுத்தியபோது கூறிய வார்த்தைகளும் படமும் அல்லவா?

அருட்தந்தை : சரியாகச் சொன்னீர்கள் பிள்ளைகளே, இவ்வாறுதான் இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார். அந்த நாள் எமக்கு மிகவும் முக்கியமான நாளாகும். அது தனது இறுதி இராவுணவென்பதை அறிந்திருந்த இயேசு எப்போதும் எம்மோடு இருப்பதற்குத் தீர்மானித்து நற்கருணையை ஏற்படுத்தினார்.



இலவச விநியோகத்திற்காக

*பிள்ளைகள்* : தந்தையே, அது எவ்வாறு?

*அருட்தந்தை* : அதாவது வெள்ளை நிற அப்பத்தை உயர்த்தி ''இது எனது உடல். இதனை வாங்கி உண்ணுங்கள்'' எனக் கூறிய இயேசு உயிரோடு வெள்ளை அப்பத்தில் எழுந்தருளுகின்றார்.

*பிள்ளைகள்* : தந்தையே! இன்று இயேசு எப்படி எம்முள் எழுந்தருளு கின்றார்?

*அருட்தந்தை* : பிள்ளைகளே! இயேசு எம்மீது கொண்டுள்ள அன்பினால் அப்பத்தின் வழியாக எம்மிடம் வர விரும்பினார். இன்று திருப்பலியின்போது நான் கூறுகின்ற தேவ வசீகர வார்த்தைகளின் வழியாக அப்பமும் இரசமும் இயேசு வின் திருவுடலாகவும் திருஇரத்தமாகவும் மாறுகின்றது.

*பிள்ளைகள்* : அப்படியா தந்தையே, நாம் எல்லோரும் இயேசுவைப் பெற்றுக்கொள்ள ஆசையாய் இருக்கின்றோம். இதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

*அருட்தந்தை* : ஆம் பிள்ளைகளே, இயேசு உயிரோடு உங்கள் இதயங்களில் எழுந்தருளுவதற்கு மிகவும் ஆசையோடு காத்திருக்கின்றார். நாம் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று தூய உள்ளத்தோடு இயேசுவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக வேண்டும். அதைப்பற்றி புனித பவுல் இவ்வாறு எழுதி இருக்கின்றார்.

''ஆகவே எவராவது தகுதியற்ற நிலையில் இந்த
அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின்
கிண்ணத்தில் பருகினால் ........ ஒவ்வொருவரும் தம்மையே
சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு
கிண்ணத்தில் பருக வேண்டும்.''

(1 கொரிந்தியர் 11 : 27 - 30)

பிள்ளைகள் : அருட்தந்தையே, நாம் இயேசுவைப் பெற்றுக் கொண்ட பின் என்ன நிகழ்கின்றது ?


அருட்தந்தை : பிள்ளைகளே! இயேசு எம் வாழ்வோடும் உடலோடும் ஒன்றிக்கின்றார். இப்போது நீங்கள் தனிமையில் இல்லை. அவர் உங்களை நேரிய வழியில் இட்டுச் செல்கின்றார், தீமையிலிருந்து மீட்டு எடுக்கின்றார். ஆகவே உங்களுக்குள் இருக்கும் இயேசுவை நன்றாக அறிந்து கொண்டு மற்றவர்களும் இயேசுவை அறிய உதவி செய்யுங்கள்.



உரு 3.2 பிள்ளைகள் நற்கருணை பெறுதல்

நற்கருணையைப் பெறுவதற்கான ஆயத்தம்

- பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்றுக்கொள்ளுதல்.
- தூய்மையான உள்ளத்தோடு திருப்பலியில் பங்குபற்றுதல்.
- திருப்பலிக்கு முன்பு ஒரு மணித்தியாலம் உபவாசம் இருத்தல்.
- தனிமையில் தினமும் செபித்தல்.
- பக்தியோடு இயேசுவைப் பெற்றுக்கொள்ளல்.



## செபம்

அன்பான இயேசுவே, சிறுவர்களாகிய எங்களுடைய இதயத்தில் அன்போடு எழுந்தருளியிருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இயேசுவே நாங்கள் உமக்கு கீழ்ப்படிவுள்ள நல்ல பிள்ளைகளாக வாழ்வதற்கு எங்களுக்கு உதவி செய்தருளும்.

ஆமென்



## ஒப்படை

1. நற்கருணையைப் பெறுவதற்கு தகுந்த முறையில் ஆயத்தம் செய்வதற்காக ஒரு செபம் எழுதுங்கள்.
2. நற்கருணையின் வழியாக உங்களுக்குள் எழுந்தருளும் இயேசுவுக்காக நீங்கள் செய்யக்கூடியவற்றைக் கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

| | |
|---|---|
| வீட்டில் | |
| பாடசாலையில் | |
| மறைப் பாடசாலையில் | |

## செயற்பாடு

1. கீழ்க் காணப்படும் தலைப்புகளைச் சிறிய புத்தகம் ஒன்றில் எழுதி **ஆன்மீக மலர்ச்செண்டு** என்ற பெயரை எழுதுங்கள். அத்தலைப்புகளில் கூறப்படுகின்றவற்றை நீங்கள் நிறை வேற்றும்போதெல்லாம் அதன் முன்பாக நட்சத்திரங்களை ஒட்டுங்கள். இவ்வருடத்தில் நீங்கள் முதன்முதல் நற்கருணை பெறுகின்ற நாளில் மரியன்னையின் திருச்சொரூபத்தின் பாதத்தில் அதனை வையுங்கள்.

    1. திருப்பலியில் பங்குபற்றிய தடவைகள்
    2. குடும்பத்தில் செபமாலை செபித்த தடவைகள்
    3. ஒறுத்தல் முயற்சிகள் செய்த தடவைகள்
    4. நற்செயல்கள் செய்த சந்தர்ப்பங்கள்
    5. சிறிய செபங்கள் செபித்த சந்தர்ப்பங்கள்.

    (உதாரணம் : ''இயேசுவே, நான் உம்மை அன்பு செய்கின்றேன்'' போன்றவை)

# 4 பொறுப்புகளை நிறைவேற்றுவோம்



காலையில் யன்னற் கதவினூடாக - வந்தன சூரிய ஒளிக் கதிர்த் துளிகள்
குருவிகளின் ஒலிகளின் ஊடாக - சொன்னதுவே சில செய்தித் துளிகள்
குளிர் காற்று வீசியதால் - தந்ததுவே மனதிற்கு ஆறுதல் துளிகள்
மகிழ்ச்சியோடு காண முடிந்ததுவே - உலகின் அழகான துளிகள்

புதிய நாளை உதயமாக்கியவர் - எமது இறைதந்தையே
இந்நாளில் எமது வேலைகள் அனைத்திற்கும் - உரிமையானவர் அவரே
மகிழ்ச்சியைப்போல துன்ப துயரங்களையும் - ஏற்றுக் கொண்டவர் இறைவனே
ஆசீர் பெற்ற நாம் அனைவரும் - நன்றி கூறுவதும் அவருக்கே


இலவச விநியோகத்திற்காக

பத்து மாதங்கள் என்னை வயிற்றில் சுமந்து - என்னை வளர்த்தவர் அன்னையே
மடியில் வைத்து தாலாட்டியது - என்னில் உள்ள அன்பினாலே
பல்வேறு தடைகளை உடைத்து - என்னைக் காப்பாற்றியவர் அன்னையே
அவர் நோயுற்றபோது - கவனித்துக் கொண்டதும் நானே

இடையூறுகளின் மத்தியில் கஷ்டப்பட்டு - என்னை வளர்த்தவர் தந்தையே
எந்நாளும் வியர்வை சிந்தி - என்னைக் கவனித்தவர் என் தந்தையே
இல்லை எனக் கூறாமல் - நல்லதை எனக்குத் தந்தவர் என் தந்தையே
முதுமையடைந்து இயலாதபோது - அவரைத் தாங்கிக் கொண்டதும் நானே

பிழையான வழியில் செல்லாதிருப்போம் - பெற்றோருக்குப் பணிவோம்
மதிப்பளிப்போம் கீழ்ப்படிவோம் - பெற்றோர் மனதை மகிழ்விப்போம்
தயக்கம் காட்டாது - பாதங்களை வணங்கி உதவுவோம்
பெற்றோரை எமக்குத் தந்த - இறைதந்தைக்கு நன்றி கூறுவோம்

அண்ணா அக்காவைப் பார்த்து - நன்றாகக் கற்கப் பழகுவோம்
தம்பி தங்கையைப் பாதுகாத்து - கற்பதற்கு உதவுவோம்
வீட்டு வேலைகளில் உதவிசெய்து - கீழ்ப்படிவுள்ள நல்ல பிள்ளைகளாவோம்
நல்ல பிள்ளைகளாக - இறைதந்தையை மகிழ்விப்போம்

பாடசாலைக்குச் செல்வோம் - வகுப்பறையைச் சுத்தம் செய்வோம்
அறிவைப் பெறுவோம் - நல்ல பிள்ளைகளாக இருப்போம்
இயலாதோருக்கு சொல்லிக் கொடுப்போம் - ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்வோம்
எதிர்காலத்தைச் செழிப்பாக்குவோம் - வருங்கால நாட்டைப் பாதுகாப்போம்

ஓடி விளையாடுவோம் - துடுப்பினால் திறமை படைப்போம்
அகங்காரத்தை நீக்கிடுவோம் - வெற்றிதோல்விகளை ஏற்றுக்கொள்வோம்
ஆசிரியர் மனதை நோகச் செய்யாமல் - பண்புள்ள நல்ல பிள்ளைகளாவோம்
இறையருளைப் பெற்றுக்கொள்வோம் - இறைவனுக்கு நன்றி கூறுவோம்

**படியுங்கள் / தினமும் வாசியுங்கள்**

*அன்பான இறைதந்தையே! வீட்டிலும் பாடசாலையிலும் எல்லா இடங்களிலும் பொறுப்புகளைச் சரியாக நிறைவேற்றுகின்ற நல்ல பிள்ளையாவதற்குத் தேவையான அருளை எமக்குத் தந்தருளும்.*

### ஒப்படை

1. அ. முதலாவது இரண்டாவது கவிதைகளில் காட்டியவாறு இறை தந்தை எமக்குத் தந்துள்ளவற்றின் பெயர்களை எழுதுங்கள்.

   ஆ. காலையில் எழுந்தவுடன் எல்லாம் வல்ல இறைதந்தைக்கு நன்றி கூறும் ஒரு சிறு செபம் எழுதுங்கள்.

2. வீட்டில் உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் செய்யக்கூடிய உதவிகள் மூன்று எழுதுங்கள்.

### செயற்பாடுகள்

1. உங்களது வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருப்பதற்குச் செய்ய வேண்டியவற்றை சுவரொட்டியாகத் தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
2. கவிதையில் மனதைக் கவர்ந்த சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரையுங்கள்.
3. கவிதையில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய ஐந்து நற்பண்புகளை அட்டையில் எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

# 5 திறமைகளுக்கும் ஆற்றல்களுக்கும் இறைவனுக்கு நன்றி கூறுவோம்

*இறைவன் எமக்குத் தந்துள்ள*
*வாழ்வு ஒரு பரிசாகும்.*
*எமது ஆற்றல்களைத் திறமைகளைப் பிறர் நலப்*
*பணிக்காகப் பயன்படுத்துவோம்.*

எமது அன்பான இறைதந்தை எம் எல்லோரையும் பல்வேறு ஆற்றல்களோடும் திறமைகளோடும் படைத்துள்ளார். மேலேயுள்ள பாடலில் இக்கருத்தே உள்ளது. நாம் எமது ஆற்றல்கள், திறமைகள் எவை என்பதைப் பார்ப்போம். அவ்வாறே நாம் பிறருடைய தேவைகளுக்காக ஆற்றல்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் பார்ப்போம்.

சாந்தி : உலகத்தைப் படைத்த இறைதந்தையின் - அன்பின் கதையை எல்லோரது முன்னிலையிலும் - கூற நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

சாரதா : அழகான கையெழுத்தின் வழியாக - இறைதந்தையின் மகிமையை மேன்மேலும் விபரித்து எழுத - எனக்கும் இயலுமாக இருந்தது.

சாரங்கன் : வயலின், புல்லாங்குழலோடு - இணைந்த இனிய பாடலோசை கூடியிருந்த அனைவரையும் - வியப்பில் ஆழ்த்திய நேரமது

சாரா : உயரம், நீளம் பாய்ந்து ஆற்றல்களைப் படைத்து எந்நாளும் மகிழ்ச்சியுடன் இருப்போம்.

சாந்தன் : தாள்களை வெட்டி பூக்கள் செய்து ஆசிரியரின் மேசையை அலங்கரிப்போம். நீர் ஊற்றி களிமண்ணைக் குழைத்து விளையாட்டு வீடு செய்வோம்.

சாந்தினி : சிறிய எனது ஏப்பிரனின் பையில் பூவொன்று தைத்தேன். எனது ஆற்றல்களைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்தனர்.

சாள்ஸ் : செல்லும் இடமெல்லாம் வெற்றி முழக்கம் எழுப்பி கிறிஸ்தவப் பண்புகளை எடுத்துக் காட்டுவோம்.

எல்லோரும் : வனைதல், பின்னுதல், செதுக்குதல், ஓடுதல், பாய்தல், ஆடுதல், பாடுதல் போன்ற பல்வேறு ஆற்றல்களோடு எமது தந்தையாம் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.



உரு 5.1 பல்வேறு ஆற்றல்களை வெளிப்படுத்தும் பிள்ளைகள்



## செபம்

அன்பான இறைதந்தையே! நீங்கள் எனக்குத் தந்துள்ள திறமைகள், ஆற்றல்களுக்கு நன்றி கூறுகின்றேன். அந்த அனைத்து ஆற்றல்களையும் அறிந்து பிறரின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்கு எனக்கு உதவி செய்தருளும்.

ஆமென்.



## ஒப்படை

1. பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரையாடலை இராகத்தோடு பாடுங்கள். பொருத்தமான அங்க அசைவுகளைப் பயன் படுத்துங்கள்.
2. பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிள்ளைகளிடம் இருந்த ஆற்றல்களையும் திறமைகளையும் அட்டவணைப்படுத்துங்கள்.
3. ஐந்து இதழ்கள் உள்ள ஒரு மலரை வரையுங்கள். மலரின் நடுவில் உங்கள் பெயரை எழுதுங்கள். இதழ்களில் உங்களிடமுள்ள ஆற்றல்களை வெவ்வேறாக எழுதுங்கள். இள நிறத்தினால் மலரை நிறந்தீட்டுங்கள்.
4. இறைதந்தையிடமிருந்து நீங்கள் பெற்றுகொண்ட ஆற்றல்கள், திறமைகளுக்கு நன்றி கூறி ஒரு சிறிய செபம் எழுதுங்கள்.

## செயற்பாடு

கழிவுப் பொருள்களைப் (வெற்றுப் பிளாஸ்டிக் போத்தல்கள், தேங்காய் பூ, வெங்காயத்தோல் போன்றவற்றைப்) பயன்படுத்தி சுவர் அலங்காரமொன்றை ஆக்கமாகச் செய்து வகுப்பறையை அலங்கரியுங்கள்.

# 6 சக்கேயுவின் மனமாற்றம்

இயேசு எரிக்கோவை நோக்கிப் புறப்படுகின்றார்.




சக்கேயு இயேசுவைப் பார்ப்பதற்காக முசுக்கட்டை மரத்தில் ஏறுகின்றார்.




சக்கேயு மரத்திலிருந்து கீழே இறங்கினார்




சக்கேயு இயேசுவை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றார்.









நற்பண்புகளைக் கற்பித்த இயேசு அவற்றைச் செயற்படுத்தியதை மேலே உள்ள நிகழ்ச்சியின் வழியாகக் காணக்கூடியதாயுள்ளது. சமூகத்தினாலே ஒதுக்கப்பட்டவரான சக்கேயுவுக்கு இயேசு காட்டிய அன்பினால் அவர் முழுமையான மனமாற்றமடைந்தார்.

பிள்ளைகளே, நாமும் எவரையும் ஒதுக்கி வைக்கக்கூடாது. இயேசு ஒதுக்கப்பட்டவர்களை அன்போடு வரவேற்றதைப்போன்று நாம் அனைவரையும் அன்போடு ஏற்றுக்கொள்வோம்.



**செபம்**

*அன்பான இறைதந்தையே, எனது வகுப்பில், எனது குடும்பத்தில் பல்வேறு காரணங்களால் ஒதுக்கப்பட்டவர்களைத் தேடிச் சென்று அவர்களை அன்பு செய்வதற்கு எனக்குச் சக்தியைத் தந்தருளும். ஆமென்.*



**ஒப்படை**

இவற்றைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.


1. கீழே காணப்படும் வாக்கியங்கள் சரியாயின் சிவப்பு நிறப் பூவையும் பிழையாயின் கறுப்பு நிறப் பூவையும் தரப்பட்டுள்ள சதுரத்தில் வரைந்து நிறந்தீட்டுங்கள்.
   - i. இயேசு பாவிகளை அன்பு செய்தார். ☐
   - ii. சக்கேயு இயேசுவைப் பார்க்க விரும்பினார். ☐
   - iii. நாம் எப்போதும் கெட்டிக்காரர், பணக்காரரோடு பழக வேண்டும். ☐
   - iv. வகுப்பில் உள்ள அனைவரையும் எனது நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும். ☐
   - v. இயேசு சக்கேயுவின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தினார். ☐

2. இப்பாடத்தின் வழியாக சக்கேயுவின் வாழ்விலிருந்து நாம் பெறக்கூடிய படிப்பினைகள் இரண்டு எழுதுக.

# 7 பேரிரக்கமுள்ள இறைதந்தை

இரக்கமுள்ள தந்தை உவமையிலிருந்து சில படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (லூக்கா 15:11-32)

1



ஒருவருக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். ஒரு நாள் இளைய மகன் ''அப்பா சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும்'' என்றார். அப்பா தனது சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார்.

2




இளைய மகன் தொலை நாட்டிற் குச் சென்று, தனது சொத்தை நண்பர்களோடு சேர்ந்து வீணாகச் செலவு செய்தார்.

3




தன்னிடமுள்ளதைச் செலவு செய்து முடித்ததும் நண்பர்கள் அவரைக் கைவிட்டுச் சென்றனர். அவர் தனிமைப் படுத்தப்பட்டார்.

4




உணவும் உடையும் துணையும் இன்றி இருந்த அவருக்குப் பன்றிகள் மேய்க்க வேண்டி ஏற்பட்டது. பன்றிகளுக்குக் கொடுக்கப்படும் உணவில் தன் வயிற்றை நிரப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

5




தனது தவறுகளை உணர்ந்த அவர் மனம்வருந்தி மீண்டும் தனது தந்தையிடம் திரும்பி வந்தார். அவர் மன்னிப்புக் கேட்பதற்கு முன் தந்தை அவரைக் கட்டித் தழுவினார்.

6



இளைய மகன் வந்த மகிழ்ச் சியால் தந்தை விருந்தொன்றை ஆயத்தப்படுத்தியுள்ளதை அறிந்த மூத்த மகன் கோபமடைந்தான்.

7



மூத்த மகனை அழைத்த தந்தை ''மகனே! நீ எப்போதும் என்னுடன் இருக்கின்றாய். என்னுடையதெல்லாம் உன்னு டையதே. இப்போது நாம் மகிழ்ந்து கொண்டாடி இன்புற வேண்டும். உன் தம்பி இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர் பெற்றுள்ளான்'' என அவருக்கு ஆறுதல் கூறினார்.



இலவச விநியோகத்திற்காக

இந்த உவமை வழியாக இறைதந்தையின் அன்பு எமக்குத் தெளிவாகின்றது. நாம் தவறு செய்து இறைவனிடமிருந்து விலகிச் செல்லும் போதெல்லாம் இறைதந்தை வேதனையடைகின்றார். நாம் தவறுகளை உணர்ந்து ஏற்றுக் கொண்டு திரும்பி வரும்வரை இறைதந்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். எனவே நாம் விரைவாக எமது தவறுகளை உணர்ந்து மனம்மாறி இறைதந்தையிடம் திரும்பி வந்து அவரை மகிழ்விப்போம்.



**செபம்**

*இறைதந்தையே, பாவியாகிய என்னை மன்னித்தருளும். என்னுடைய தவறுகளை உணர்ந்து அன்புடன் உம்மிடம் திரும்பி வர நேரிய வழியை எனக்குக் காட்டியருளும்.*


*ஆமென்.*



**ஒப்படை**

1. கீழே உள்ள சொற்களைப் பயன்படுத்தி சரியான வசனங்களை ஆக்குங்கள்.
   i. எப்பொழுதும் / நாம் /அளிப்போம் / பிறருக்கு / மன்னிப்பு
   ii. செய்தார் / இளைய மகன் / வீணாகச் / தந்தையின் / சொத்தை / செலவு
   iii. மகன் / தந்தை / காணாமல் / போன / பார்த்துக் கொண்டிருந்தார் / மீண்டும் / வழியைப் / வரும்வரை
2. இரக்கமுள்ள தந்தையின் உவமையை நடித்துக் காட்டுங்கள்.

# 8 அதி உன்னத இறைதந்தையோடு பேசுவோம்




உரு 8.1 தனியாகவும் குழுவாகவும் செபிக்கும் சந்தர்ப்பங்கள்

கீழே உள்ள கவிதையை இராகத்தோடு பாடுங்கள்

காலையிலே எழும்போது - காலை உணவு உண்ணும் முன்பு
பள்ளிக்குச் செல்லும்போது - பாடங்களைப் படிக்கும்போது
கூடி விளையாடும்போது - கடும் துன்ப நோயின்போது
கோவிலுக்குச் சென்றபோது - செபிக்கின்ற செபங்கள் எல்லாம்
தனிச்செபம் என்றே - நான் அழைப்பேன். //

குடும்பமாக ஒன்று சேர்ந்து - செபமாலை செபிக்கும்போது
துன்பத்திலும் இன்பத்திலும் - திருமணித்தியாலம் செய்யும்போது
பள்ளியில் நாம் ஒன்று கூடி - இறைபுகழ் பாடும்போது
ஞாயிறன்று திருப்பலியில் - இறைவனுடன் பேசுவதும் செபிப்பதும்
குழுச்செபம் என்றே - நாம் அழைப்போம். //



**செபம்**

அன்பான இறைதந்தையே, என்னுடைய தேவைகளுக்காக மட்டுமன்றி பிறருடைய தேவைகளுக்காக தனியாகவும் குழுவாகவும் செபிக்க எமக்கு அருள்தாரும்.

ஆமென்.



**ஒப்படை**

1. கீழேயுள்ள கருத்துகள் சரியாயின் (✓) அடையாளத்தையும் பிழையாயின் (✗) அடையாளத்தையும் அடைப்புக்குறிக்குள் இடுங்கள்.
   i. குடும்பத்தில் ஒற்றுமையாகச் சேர்ந்து செபமாலை சொல்லுவோம்.( )
   ii. தனியாகச் சொல்லும் செபம் குழுச்செபம் ஆகும். ( )
   iii. திருப்பலியில் செபிப்பது தனிச்செபமாகும். ( )
2. பாடத்தில் உள்ள கவிதைகளில் சொல்லப்படுவதைப் போல நீங்கள் தனியாகவும் குழுவாகவும் செபிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இவ்விரண்டு எழுதுங்கள்.
3. பாடசாலையில் காலைக் கூட்டத்தில் செபிக்கக்கூடிய பொருத்தமான சிறிய செபம் ஒன்றை எழுதுங்கள்.

**செயற்பாடு**

மணிகள், உறிஞ்சு குழாய்கள், துணிப்பட்டிகளை உபயோகித்து செபமாலை ஒன்றைச் செய்யுங்கள்.

# 9 இறைவனோடு அன்பில் இணைவோம்

அருட்சகோதரி :

பிள்ளைகளே! இறைவனோடு உள்ள உறவை வளர்த்துக் கொள்வதற்கான சில செபங்கள் உள்ளன என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா? இச்செபங்கள் எங்களை மிகவும் ஆழமான செபவாழ்வுக்கு இட்டுச் செல்கின்றன. நாங்கள் அவற்றைப் பொதுச் செபம் என அழைக்கின்றோம். திருச்சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட இப்பொதுச் செபங்கள் எமக்கு மிகவும் முக்கியமானவையாகும். அப்படியானால், இவ்வாறான பொதுச் செபங்கள் எவை என்பதை நாம் பார்ப்போம்.

- **அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணம்**



நாம் விசுவசிக்கின்ற முக்கிய உண்மைகள் இச்செபத்தில் அடங்கியுள்ளன. தினமும் நாம் செபமாலை செபிக்கும்போது விசுவாசப் பிரமாணத்தை அறிக்கை யிடுகின்றோம்.

- **உத்தம மனஸ்தாபச் செபம் (மனத்துக்கச் செபம்)**



பாவசங்கீர்த்தனம் செய்யும் போது செபிக்கின்ற செப மாகும். இறையன்புக்கு எதிராக நாம் செய்யும் பாவங்களுக்கு மன்னிப்புக்கேட்டுச் செபிக் கின்ற செபமாகும்.



இலவச விநியோகத்திற்காக

- காலைச் செபம்



காலையில் எழுந்தவுடன் இறை தந்தைக்கு நன்றி கூறுவதோடு அவரது பாதுகாப்பையும் வேண்டிச் செபிக்கின்றோம்.

- இரவுச் செபம்



இரவு நித்திரைக்குச் செல்லும் முன் இறைவனின் பாதுகாப்பை வேண்டிச் செபிக்கின்றோம்.

- மூவேளைச் செபம்



காலை, நண்பகல், மாலை என ஒரு நாளைக்கு மூன்று முறை செபிக்கும் செபம்.

- பாஸ்கு காலத்து மூவேளைச் செபம்



இச்செபத்தை பாஸ்கு காலத்தில் மட்டும் செபிக்கின்றோம்.


★ அன்பின் பிள்ளைகளே, தினமும் செபிக்கும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் இப்பொதுச் செபங்களைச் சொல்லி இறைவனிடம் செபிப்பதற்குக் கற்றுக்கொள்ள நான் உங்களிடம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**வாழ்க்கைக்கு**

பொதுச் செபங்களின் வழியாக இறைவனோடு உள்ள உறவை அதிகமாக வளர்த்துக் கொள்வோம்.

**ஒப்படை**

1. பின்னிணைப்பில் உள்ள விசுவாசப் பிரமாணத்தில் குறிப்பிடப்படும் முக்கிய நபர்களின் பெயர்களை இவ்வெற்றுக் கட்டங்களில் நிரப்புங்கள்.




**செயற்பாடு**


இப்பாடத்திலுள்ள எல்லாச் செபங்களையும் மனனம் செய்யுங்கள்.

அறிவுறுத்தல் : ஒன்பதாவது பாடத்திற்குரிய பொதுச் செபங்கள் 81, 82, 83 ஆம் பக்கங்களிலுள்ள பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

# 10 பரிந்துரையும் - திருமண வைபவமும்

பிள்ளைகளே, திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மரியாவின் பரிந்துரை பற்றிய நிகழ்வைப் பற்றிக் கற்போம்.

கலிலேயாவின் கானா என்னும் ஊரில் திருமண வைபவம் ஒன்று நடந்தது. இயேசுவின் தாயாகிய மரியாவும் அந்தத் திருமண வைபவத்திற்கு வந்திருந்தார். மரியா இந்தத் திருமண வைபவத்தின் செயற்பாடுகளில் மிகவும் உதவி செய்திருந்தார். இயேசுவுக்கும் அவரது சீடர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வைபவத்திற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் திராட்சை இரசம் வழங்கப்பட்டது. தொட்டிகளில் திராட்சை இரசம் தீர்ந்துவிடவே அங்கு இருந்த பணியாட்கள் கலக்கம் அடைந்தனர். இதனை அறிந்த மரியா தனது மகன் இயேசுவிடம் இதைப் பற்றிக் கூறினால் அதற்குத் தீர்வு கிடைக்கும் என எண்ணினார்.



உரு 10.1 இரசம் தீர்ந்துவிட்டது என மரியா இயேசுவிடம் கூறுகிறார்

மரியா உடனே இயேசுவிடம் ''**திராட்சை இரசம் தீர்ந்து விட்டது**'' என அறிவித்தார். இதனால் ஏற்படும் அவமானத்திலிருந்து இவர்களைக் காப்பாற்றும்படி கூறினார். அவர் மரியா பக்கம் திரும்பி '' **அம்மா அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்? என்னுடைய நேரம் இன்னும் வரவில்லையே**'' எனக் கூறினார். மரியா பணியாட்களிடம் சென்று ''**இவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்**'' எனக் கூறினார். அவர்கள் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக்கொண்டனர்.



உரு 10.2 இயேசு தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்த கல்தொட்டிகளை ஆசீர்வதிக்கிறார்

இயேசு அவ்விடத்துக்கு வந்து அங்கிருந்த ஆறு கல்தொட்டிகளையும் தண்ணீரால் நிரப்பும்படி பணியாட்களுக்குக் கூறினார். பணியாளர்கள் ஆறு கல்தொட்டிகளையும் தண்ணீரால் நிரப்பினார்கள். பின்னர் இயேசு ''**இப்போது மொண்டு பந்தி மேற்பார்வையாளர்களிடம் கொண்டு செல்லுங்கள்**'' என்று அவர்களிடம் கூறினார். மேற்பார்வையாளர் இந்த திராட்சை இரசத்தினை சுவைத்தார். அவர் ஆச்சரியப்பட்டார். இந்த திராட்சை இரசம் எங்கிருந்து வந்தது என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. எனினும் பணியாட்கள் இதனை அறிந்திருந்தனர்.

மேற்பார்வையாளர் மணமகனிடம் வந்து நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறாமல் ஏன் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறினீர்கள் எனக் கேட்டார். எதுவும் தெரியாத மணமகன் ஆச்சரியமடைந்தார். அவர் இதுபற்றி அறிய முற்பட்டார். நடந்த எல்லாவற்றையும் அறிந்துகொண்டார். நசரேத்திலிருந்து வந்திருந்த இயேசுவே தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றினார் என்பது தெரியவந்தது. இச்சந்தர்ப்பத்தில் மரியா பரிந்துரையாவிட்டால் திருமண வீட்டார் அவமானம் அடைந்திருப்பார்கள். அங்கிருந்த அனைவரும் இயேசுவின் வல்லமையைப் பற்றிக் கதைத்தனர்.

பிள்ளைகளே உங்களுக்குத் தெரியுமா? இதுவே இயேசு செய்த முதல் அரும் அடையாளம் ஆகும்.

பிள்ளைகளே, இந்நிகழ்விலிருந்து எமக்காக அன்னை மரியா பரிந்துரைக்க முடியும் என்பது தெரியவருகிறது. எனவே அன்னை மரியாவிடமுள்ள பக்தியை வளர்த்துக்கொள்வோம்.



**செபம்**

*அன்பான இறைதந்தையே, நாம் எமது வாழ்வில் தேவைகளின்போது உம்மிடம் வருகின்றோம். அன்னை மரியாவின் பரிந்துரையினால் எமது தேவைகளை நிறைவுசெய்தருளும். ஆமென்.*



**ஒப்படை**

1. இயேசு தனது அன்னை கேட்டதை நிறைவேற்ற முன்னர் கூறிய வார்த்தைகளை எழுதுங்கள்.
2. பிறருடைய துன்பங்களின்போது மரியாவைப் போன்று நீங்கள் உதவிசெய்த ஒரு சந்தர்ப்பத்தைச் சுருக்கமாக எழுதுங்கள்.

**செயற்பாடு**

கானா ஊர் திருமண வைபவத்தில் இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றிய அரும் அடையாளத்தை நடித்துக் காட்டுங்கள்.

# 11 இயேசுவின் அளவற்ற இரக்கம்

பிள்ளைகளே! இங்கே காணப்படும் படங்களைப் பாருங்கள். அப்படங்களின் அருகில் உள்ள வசனங்களை வாசித்து கதை ஒன்றை உருவாக்குங்கள். (யோவான் 6 : 1 - 13)



1. இயேசுவைப் பெருந்திரளான மக்கள் பின்தொடர்ந்து சென்றனர். இயேசு அவர்களுக்கு இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார். உடல் நலம் அற்றிருந்தோரைக் குணமாக்கினார்.

2. மாலையானபோது இப்பெருந்திரளான மக்களுக்கு உண்பதற்கு ஏதேனும் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் இது சீடர்களுக்கு இயலாத விடயமாயிருந்தது.






3. இயேசு அவர்களைப் பார்த்து இம்மக்களுக்குக் கொடுப்பதற்கு உங்களிடம் உணவு இருக்கின்றதா எனக் கேட்டார். இங்குள்ள ஒரு சிறுவனிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன எனச் சீடர்களில் ஒருவர் கூறினார்.



4. அப்போது இயேசு இப்பெருந் திரளான மக்களை ஐம்பது ஐம்பது பேராக அமரச் செய்யும்படி கூறினார். இச் சிறுவன் கொண்டு வந்த அப்பங் களையும் மீன்களையும் எடுத்து இயேசு வானத்தை அண்ணார்ந்து பார்த்து ஆசீர்வதித்து மக்களுக் குப் பகிரும்படி சீடரிடம் கூறினார்.





5. இம்மக்கள் மத்தியில் ஆண் கள் மட்டும் ஐயாயிரம் பேர் இருந்தனர். எல்லோரும் வயிறாற உண்டு திருப்தி அடைந்தனர். எஞ்சிய துண்டு களைப் பன்னிரண்டு கூடை களில் நிரப்பினர்.

பிள்ளைகளே, இயேசு செய்த இந்த அரும் அடையாளத்தை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். இதுவே இயேசு செய்த ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்த அரும் அடையாளமாகும். இதனை அப்பங்களைப் பலுகச் செய்த அரும் அடையாளம் எனவும் அழைப்பர். அன்று போல் இன்றும் இயேசு அன்பின் உணவாகிய நற்கருணையின் வழியாக எமது ஆன்மீகப் பசியைப் போக்குகின்றார்.



**செபம்**

அன்பான இயேசுவே, நற்கருணையின் வடிவில் இருக்கும் உம்மை எந்நாளும் சந்திப்பதற்கும் என்னிடமுள்ளதை பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கும் என்னை வழி நடத்தியருளும்

ஆமென்.



**ஒப்படை**

1. இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசு செய்த அரும் அடையாளம் எது?
2. வெற்றுக் கூடுகளுக்குப் பொருத்தமான படங்களை வரைந்து அவற்றைப் பூரணப்படுத்துங்கள்.

   சிறுவனிடம் ஐந்து ☐ இரண்டு ☐ மட்டுமே இருந்தன.

   அங்கிருந்த எல்லோரும் உண்ட பின்னர் எஞ்சிய துண்டுகளை

   பன்னிரண்டு ☐ நிரப்பினர்.

3. நாம் கற்ற இந்த அரும் அடையாளக் கதையில் உள்ள சிறுவன் தன்னிடமிருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பிறருக்காகத் தியாகம் செய்ததைப்போல் நீங்கள் பிறருக்கு உதவிசெய்யக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களை எழுதுங்கள்.

**செயற்பாடு**

ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்த அரும் அடையாளத்தை நடித்துக் காட்டுங்கள்.

# 12 அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

ஒவ்வொரு ஞாயிறு தினத்தின் மாலையிலும் பிள்ளைகள் குளக்கரையில் அமைந்திருந்த மலையடி வாரத்தில் ஒன்றுகூடித் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். இச்சந்தர்ப்பத்தில் கிராமத்திலுள்ள சீமோன் தாத்தாவும் இணைந்துகொள்வார். சீமோன் தாத்தா பழைய கதைகளைக் கூறுவதில் கெட்டிக்காரன்.

பீற்றர் : அதோ! ...... சீமோன் தாத்தா வருகிறார்.


தாத்தா : இறை ஆசீர் பிள்ளைகளே! இன்று நீங்கள் மறைக்கல்வி வகுப்பிற்குச் சென்றீர்களா? திருப்பலிக்கும் சென்றீர்களா?

உதயன் : ஆம் தாத்தா, திருப்பலியின்போது அருட்தந்தை தவக்காலத்தைப் பற்றியும் யூதரின் பாஸ்காவைப் பற்றியும் கூறினார். தாத்தா எமக்கு அதைப் பற்றி மிகவும் விளக்கமாகக் கூறுங்கள்.

தாத்தா : பிள்ளைகளே, கத்தோலிக்கராகிய எங்களின் முக்கிய திருநாள் பாஸ்கா ஆகும்.

பிள்ளைகள் : ஆம் தாத்தா, நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

தாத்தா : ஆம் பிள்ளைகளே, முற்காலத்தில் எமது மூதாதையர் களான இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் பார்வோன் மன்னனின் கீழ் அடிமைகளாகத் துன்பப்பட்டனர். அவன் எமது மூதாதையரை மிகவும் வதைத்தான். உணவும் பானமும் கொடுக்காமல் கடும் வேலைகள் வாங்கினான். கசை அடியும் கொடுத்தான்.



உரு 12.1 பார்வோன் அரசன் இஸ்ரயேல் மக்களிடம் கடின வேலைகளை வாங்குதல்

பீற்றர் : தாத்தா, அரசன் ஏன் இவ்வாறு செய்தான்?

தாத்தா : இஸ்ரயேல் மக்கள் எகிப்திய மக்களை விட அதிகளவு பலுகிப் பெருகியதால் தமது மக்களையும் அடக்குவர் எனப் பார்வோன் மன்னன் பயந்தான். இதனால் இஸ்ரயேல் மக்களிடம் கடினமான வேலைகளைக் கொடுத்தான். இவ்வாறு இஸ்ரயேல் மக்கள் அடிமைகள் ஆக்கப்பட்டனர்.

அஜிதா : ஐயோ பாவம், எமது மூதாதையர் பல துன்பங்களை அனுபவித்துள்ளனர் அல்லவா?

தாத்தா : ஆம் மகளே, எனினும் மன்னன் தனது துன்புறுத்தல்களை நிறுத்தவில்லை. இத்துன்பங்களின் மத்தியில் இஸ்ரயேல் மக்கள் இறைவனிடம் மன்றாடினர். இறைவன் அவர்களின் மன்றாட்டைக் கேட்டார். இறைவன் இஸ்ரயேல் மக்களை மீட்கும் பணியை மோசேயிடம் ஒப்படைத்தார்.

ஆம் பிள்ளைகளே, அந்த நாளும் வந்தது. மோசேயின் கட்டளைப்படி இஸ்ரயேல் மக்கள் தமது வீட்டின்



இலவச விநியோகத்திற்காக

இரு கதவு நிலைகளிலும் மேல் சட்டத்திலும் ஆட்டின் இரத்தத்தைப் பூசி அடையாளப்படுத்தினர். பார்வோன் மன்னனின் பிடிவாதத்தினால் எகிப்திய மக்களின் தலைப் பேறான ஆண் பிள்ளைகள் கொல்லப்பட்டனர். எனினும் ஆட்டின் இரத்தம் பூசப்பட்ட இஸ்ரயேல் மக்களின் வீடு களுக்கு எந்தத் தீமையும் ஏற்படவில்லை. இறுதியாக பார்வோன் மன்னன் பயந்து மோசேயிடம் இஸ்ரயேல் மக்களை அழைத்துச் செல்லும்படி உத்தரவு பிறப்பித்தான்.

பிள்ளைகள் : தாத்தா அன்று இஸ்ரயேல் மக்கள் என்ன செய்தார்கள்?

தாத்தா : ஆட்டின் இறைச்சியை நெருப்பில் வாட்டி, கசப்புக் கீரையோடும் புளியாத அப்பத்தோடும் விரைவாக உண்டு அந்நாட்டிலிருந்து புறப்படவேண்டுமென மோசே கட்டளையிட்டார். இதன்படி எகிப்திலிருந்து அவர்கள் புறப்பட்டுச் சென்று செங்கடலைக் கடந்தனர்.



உரு 12.2 இஸ்ரயேல் மக்கள் பாஸ்கா உணவை உண்ணல்



உரு 12.3 இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடத்தல்

இஸ்ரயேல் மக்கள் வருடம் தோறும் இந்த வெற்றி நிகழ்வைக் கொண்டாடினர். அவர்கள் இந்நிகழ்வை யூத பாஸ்கா என அழைத்தனர். இப்பாஸ்காவை தலைமுறை தலைமுறையாகக் கொண்டாடி வருகின்றனர்.

பிள்ளைகள் : தாத்தா, இயேசுவும் இந்த யூத பாஸ்காவைக் கொண்டாடினாரா?

தாத்தா : ஆம் பிள்ளைகளே, யோசேப்பும் மரியாவும் இயேசுவை அழைத்துக்கொண்டு ஜெருசலேம் கோவிலுக்குச் சென்று இப்பாஸ்காவைக் கொண்டாடினர்.

பிள்ளைகள் : நல்லது, இது புதுமையான நிகழ்வல்லவா? இந்த யூத பாஸ்காவைப் பற்றிச் சொல்லித்தந்தமைக்காக உங்களுக்கு நன்றி தாத்தா.



**செபம்**

அன்பான இறைதந்தையே, அன்று நீங்கள் இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து காப்பற்றியது போல சிறுவர்களாகிய எங்களையும் துன்பங்களிலிருந்து மீட்டு நல்வழியில் இட்டுச் செல்லும்படி மன்றாடுகின்றோம்.

ஆமென்.



**ஒப்படை**

1. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புங்கள்.

(பாஸ்கா, மோசே, எகிப்தில், பார்வோன்)

i. இஸ்ரயேல் மக்களை மீட்பதற்காகத் தலைமைத்துவம் வகித்தவர் ....................... ஆவார்.

ii. இஸ்ரயேல் மக்கள் ................... அடிமைகளாக்கப்பட்டனர்.


iii. இஸ்ரயேல் மக்களை ..........மன்னன் துன்புறுத்தினான்.

iv. கத்தோலிக்கரின் உன்னத திருநாள் ...................... ஆகும்.

2. யூத பாஸ்காவில் நிகழ்த்தப்பட்ட விசேட நிகழ்வொன்றை சித்திரமாக வரையுங்கள்.

3. யூத பாஸ்காவை கொண்டாடுவதற்காக இஸ்ரயேல் மக்கள் பயன்படுத்தியவற்றை பாடத்திலிருந்து எழுதுங்கள்.

# 13 புனித வியாழன்



உரு 13.1 இயேசு திருத்தூதர்களின் பாதங்களைக் கழுவுதல்

பிள்ளைகளே, இந்தப் படத்தில் உள்ள விசேட நிகழ்வினைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?

இக்கவிதையை வாசிக்கும்போது அந்த விசேட நாள் உங்களுக்கு ஞாபகம் வரும். நாம் எல்லோரும் இக்கவிதையை இராகத்தோடு பாடுவோம்.

1. இயேசு அழைத்த அந்த ஒரு இரவிலே
   பன்னிரு திருத்தூதரும் ஒரே மேசையில் கூடினரே
   இறுதி இரவுணவென்பதை எவரும் அறிந்திருக்கவில்லையே
   அதுவே புனித வியாழன் என அழைக்கப்பட்டதே

2. தலைவன் பணியாளனாக வேண்டுமென எடுத்துக்காட்டி
திருத்தூதரது பாதங்களைக் கழுவி இயேசு முத்தமிட்டாரே
பெரிய வியாழனன்று அவர் கூறியதை, செய்தவைகளை
திருச்சபை இன்றுவரை மாற்றமின்றி நடத்துகிறதே

3. அப்பத்தை எடுத்து இயேசு நன்றி கூறி துண்டுகளாகப் பிட்டு
திருத்தூதர் அனைவருக்கும் கொடுத்து கூறிய வார்த்தைகள்
''இது எனது திருவுடல் உங்களுக்காகவே கொடுக்கப்படும்
இதை என் நினைவாக எந்நாளும் செய்வீர்'' என்றாரே

4. அவ்வாறே உணவின் பின் கிண்ணத்தை எடுத்த இயேசு
மீண்டும் நன்றி கூறியே திருத்தூதர் பக்கம் பார்த்து
''இது எனது திருஇரத்தம் உங்களுக்காகச் சிந்தப்படும்
என் நினைவாக நீங்கள் இதை எந்நாளும் செய்வீர்'' என்றாரே

5. அன்பின் வடிவமான நற்கருணையையும்
தம் பணி தொடர குருத்துவத்தையும்
புனித வியாழனன்று இறுதி இராவுணவின்போது
தந்தாரே தம் அருளடையாளங்களாக

6. உடலின் நலத்துக்காக வயிற்றுக்கு உணவு தேவையானது போல
ஆன்மீக நலத்துக்காக உள்ளத்துக்கு உணவு தேவையானது
அன்பின் பரிசாக திரு அப்பத்தை பெறும்படியாக
தினமும் முயற்சிப்போம் அன்புப் பிள்ளைகளே



**செபம்**

அன்பான இயேசுவே, நற்கருணையின் வழியாக உம்மை பெறுவதற்கு நான் ஆசையாய் இருக்கிறேன். இதனால் இயலுமான போதெல்லாம் திருப்பலியில் பங்கு பற்றி உம்மைப் பெற்றுக்கொள்ளவும் நல்ல கிறிஸ்தவப் பிள்ளையாக வளரவும் எனக்கு உதவியருளும்.

ஆமென்.

**ஒப்படை**

சுருக்க விடை எழுதுங்கள்.

i. இயேசு திருத்தூதரின் பாதங்களைக் கழுவியது எப்போது?

ii. புனித வியாழனன்று இயேசு ஏற்படுத்திய அருளடையாளங்கள் இரண்டும் எவை?

iii. இயேசு தேர்ந்தெடுத்த திருத்தூதர்கள் எத்தனை பேர்?

iv. திருத்தூதரின் பாதங்களைக் கழுவியதால் இயேசு வெளிப் படுத்திய உன்னதமான பண்பு யாது?

**செயற்பாடு**

★ பிரிஸ்டல் அட்டை ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள்.

★ அதில் இறுதி இராவுணவில் இயேசு கூறிய திருவசனங்களை எழுதுங்கள்.

★ இதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

# 14 அன்பின் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்



உரு 14.1 பங்குச் சமூகம் ஆலயத்துக்குள் நுழைதல்

அன்று ஞாயிறு தினம். எமது பங்குக் குடும்பத்தின் ஒன்றுகூடல், மக்கள் அனைவரதும் ஒற்றுமையுடனும் உதவியுடனும் நடைபெற்றது. அன்றைய தினம் உன்னத திருப்பலியுடன் எல்லா வேலைகளும் ஆரம்பமாகின. திருப்பலி ஆரம்பிக்கும் முன் நாங்கள் அனைவரும் பவனியாக ஆலயத்திற்குள் நுழைந்தோம். முதலில் திருப்பாலத்துவ சபையினராகிய நாங்களும் அதன் பின்பு ஒழுங்குமுறையாக மரியாயின் சேனை, இளைஞர் சபை, திரு இருதயச் சபை, மரியாயின் மாசற்ற இருதய சேனை, மறையாசிரியர், பீடப்பணியாளர் குழாம் ஆகியோருடன் அருட்தந்தையும் ஆலயத்துக்குள் நுழைந்தார்.

திருப்பலியின் ஆரம்பத்தில் அருட்தந்தை பங்கு என்பது ஓர் அன்புச் சமூகமாகும் எனக் கூறினார். எம் அனைவரையும் பங்குக் குடும்பமாக ஒன்றிணைப்பது அன்பின் உணவான நற்கருணையென அருட்தந்தை விளக்கிக் கூறினார். அதைப் போன்று பங்குக் குடும்பம் விசேடமாக தினமும் மரியாதையுடனும் பக்தியுடனும் கொண்டாடும் உன்னதமான உணவு நற்கருணையெனவும் கூறினார். அன்றைய திருப்பலியின்போது முன்னைய நாட்களைவிட மிக அன்புடன் நான் இயேசுவைப் பெற்றுக்கொண்டேன்.

திருப்பலியின் பின்பு நாங்கள் அனைவரும் ஆலய முற்றத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விருந்துபசாரத்தில் குடும்பமாக அமர்ந்தோம். ஒவ்வொரு குடும்பங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டிருந்த உணவை எல்லோரும் பகிர்ந்து உண்டோம். இதன்போது பக்திச் சபைகளினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பொதிகளை எமது பங்குத்தந்தை ஏழைகள் சிலருக்கு பகிர்ந்து அளித்தார். எமது குடும்பமும் இதற்குப் பங்களிப்புச் செய்தது.



**செபம்**

*அன்பான இயேசுவே, திவ்விய நற்கருணையில் உம்மைப் பெற்றுக்கொண்ட நாம் உம்மில் குடும்பமாக இணைந்து ஒற்றுமையாக வாழ அருள் தாரும். எம் அன்பை ஒருவருடன் ஒருவர் பகிர்ந்து வாழ வழிநடத்தும்.*

*ஆமென்.*



**ஒப்படை**

1. உமது பங்கின் பெயரை எழுதுங்கள்.
2. உமது பங்கில் நீங்கள் பங்குபெறக்கூடிய சபைகள் எவை?
3. திருப்பாலத்துவ சபையில் சேர்ந்து உங்களால் செய்யக்கூடிய நற்செயல்களை இரண்டை எழுதுங்கள்.

# 15 தூய்மையாக வாழ்வோம்

அம்மா : பிள்ளைகளே, தேநீர் பருக வாருங்கள்.

மகன் : அம்மா, இங்கே பாருங்கள், எங்கள் ஆசிரியையின் பெயர் கத்தோலிக்கப் பத்திரிகையில் உள்ளது.

மகள் : அம்மா, அந்த ஆசிரியைதான் எங்களுக்கு சமய பாடத்தைப் படிப்பிப்பவர்.

அம்மா : எங்கே பார்ப்போம். ஆம், ஆசிரியர் பத்திரிகைக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார். அது பெறுமதியான கடிதமாகும். மகனே, எங்களுக்கும் கேட்கும்படியாகச் சத்தமாக வாசியுங்கள்.

மகன் : **''தூய்மையாக வாழ்வோம்''**

பிள்ளைகளே! நற்கருணை என்பது உன்னதமான அருளடையாளமாகும். இது அன்பின் அருளடையாளமெனவும் அழைக்கப்படுகிறது. நாம் இயேசுவைத் தினமும் சந்திக்கக் கூடிய சிறந்த வழி நற்கருணையாகும். நாம் நற்கருணையைப் பெறுவதற்குத் தகுந்த ஆயத்தத்துடன் செல்ல வேண்டும். நல்ல பாவசங்கீர்த்தனம் செய்துகொள்வது மிக முக்கியமாகும். ஏனெனில் நாம் தெரிந்தும் தெரியாமலும் தினமும் தவறுகள் செய்கின்றோம். அதைப்போன்று இயேசுவைப் பெற்றுக்கொள்ள மிகவும் மரியாதையுடனும் பக்தியுடனும் கைகளைக் குவித்துச் செல்ல வேண்டும். நற்கருணையின் மூலம் இயேசு எம்முள் உயிருடன் எழுந்தருளுகின்றார் என ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நற்கருணையில் இயேசு உண்மையாகவே பிரசன்னமாக இருக்கிறார் என்பதை சிலர் நம்புவதில்லை.



உரு 15.1 திவ்விய நற்கருணை

பிள்ளைகளே, இவ்வாறான அவநம்பிக்கையைப் போக்க நிகழ்ந்த புதுமை ஒன்றினைப் பற்றி உங்களுக்கு நான் கூறப் போகின்றேன். இந்தப் புதுமை 1374 ஆம் ஆண்டு நெதர்லாந்தின் மிடில்பேர்க் பிரதேசத்தில் நிகழ்ந்தது.

நற்கருணை பற்றி அவநம்பிக்கை கொண்ட ஜோன் என்ற பிடிவாதக்கார இளைஞன் ஒருவன் இருந்தான். இவன் பாவசங்கீர்த்தனம் செய்வதில்லை. எனினும் தவக்காலத்தில் நற்கருணைப் பெறவேண்டும் என்பதற்காக ஒரு ஞாயிறு தினம் திருப்பலிக்குச் சென்றான். அவன் பாவங்கீர்த்தனம் செய்யாமல் நற்கருணை பெற்றுக்கொண்டான்.

என்ன ஆச்சரியம்! ஜோன் இயேசுவைப் பெற்றபோது அவனது வாயில் தசைத்துண்டு ஒன்று இருப்பதைப் போல் உணர்ந்தான். அவன் யாருக்கும் தெரியாமல் களவாக நற்கருணையைக் கடித்தான். ஜோனின் வாய் முழுவதும் இரத்தம். இந்நிகழ்வு ஜோனின் வாழ்வை மாற்றியது. அவன் சத்தமாக அழுதான். பின்பு ஆலயத்தில் இருந்தவர்கள் அனைவரும் கேட்கும்படியாக பெரிய சத்தமாகப் பாவ அறிக்கை செய்தான். அன்று தொடக்கம் அவன் நல்லவனாக வாழ்ந்தான்.

ஆகவே பிள்ளைகளே, நற்கருணை பெறுவதன் மூலம் நாம் நல்லவர்களாக வாழவும் தவறுகளிலிருந்தும் தீமைகளிலிருந்தும் விலகி இருக்கவும் உண்மை பேசவும் முடியுமென்பதை நீங்கள் விளங்கிக் கொண்டீர்கள் அல்லவா? ஆதலால் நற்கருணை ஆண்டவரை எல்லா வேளைகளிலும் ஆராதனை செய்யுங்கள். உங்கள் அனைவருக்கும் இயேசு துணைபுரிவாராக.

அம்மா : மிகவும் பெறுமதியான கடிதம். இக்கடிதத்தில் சிறுவர்களாகிய உங்களுக்கு மட்டுமன்றி பெரியோராகிய எமக்கும் முக்கியமான செய்திகள் உள்ளன.



**செபம்**

நற்கருணையில் பிரசன்னமாயிருக்கின்ற இயேசுவே, இயலுமான போதெல்லாம் உம்மை நம்பிக்கையுடன் பெறுவதற்கு எமக்கு உதவியருளும். இதன் வழியாக எமது வாழ்வை வளமாக்கியருளும். தீமையிலிருந்து எம்மைப் பாதுகாத்தருளும்.

ஆமென்.




**ஒப்படை**

1. நீங்கள் அறிந்த கத்தோலிக்கப் பத்திரிகை ஒன்றின் பெயரைக் குறிப்பிடுங்கள்.
2. ஜோன் நற்கருணை பெற்றுக்கொண்டபின் அவரில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
3. நற்கருணையைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாகும் இரண்டு முறைகளை எழுதுங்கள்.
4. தீமையை விலக்கித் தூய்மையாக வாழ்வதற்குத் தேவையான வல்லமையைக் கேட்டுச் சிறு செபம் ஒன்றை எழுதவும்.

**செயற்பாடு**

உங்களால் இயலுமான போதெல்லாம் நற்கருணை ஆண்டவரை சந்திக்கவும் அவரைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சி செய்யுங்கள்.

# 16 இறைதந்தையின் அன்பிற்குப் பிரதியன்பு காட்டுவோம்




உரு 16.1 இறைவன் சீனாய் மலையில் மோசேக்கு பத்துக் கட்டளைகளை வழங்குதல்

இறைதந்தை அளவுக்கதிகமாக எம்மை அன்பு செய்கின்றார். நாமும் இறைதந்தையை எவ்வாறு அன்பு செய்ய வேண்டுமென்பதை அவர் நமக்குச் சொல்லித்தந்தார். இஸ்ரயேல் மக்கள் இறைதந்தையால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாவர். அவர்களை எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து மீட்டு பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டுக்கு அழைத்துச் செல்வதாக இறைதந்தை வாக்குறுதி கொடுத்தார். இதற்காக மோசேயை தேர்ந்தெடுத்தார்.

கானான் நாட்டை நோக்கிய இப்பயணத்தின்போது மக்கள் கூட்டம் இறைதந்தைக்கு விருப்பமற்ற செயல்களைச் செய்யத் துணிந்தனர். இவற்றைக் கண்ட இறைவன் மோசேயுடன் பேசினார். அப்போது மக்கள் சீனாய் மலையடிவாரத்தில் இருந்தார்கள். இறைவன்

மோசேயை மலை உச்சிக்கு வருமாறு அழைத்தார். அனைத்து மக்களும் நற்பண்புள்ளவர்களாக வாழும் முறையைப் பற்றி எழுதப்பட்ட பத்துக் கட்டளைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி இறைவன் கொடுத்தார். அனைத்து மக்களுக்கும் இக்கட்டளைகளை அறிவிக்கும்படி இறைவன் மோசேயிடம் கூறினார். இக்கட்டளைகளை உள்ளடக்கிய கற்பலகைகள் கீழே தரப்பட்டுள்ளன.




**ஆசிரியை :** பிள்ளைகளே, பத்துக் கட்டளைகளை இரண்டு கற்பலகைகளில் ஏன் எழுதித் தந்தார் என்று தெரியுமா?

**பிள்ளைகள் :** டீச்சர்! நாங்கள் அதைப்பற்றி அறிய மிகவும் ஆவலாய் இருக்கின்றோம்.

ஆசிரியை : முதலாவது கற்பலகையில் 1, 2, 3 ஆகிய கட்டளைகளால் நாம் எல்லாவற்றையும் விட முழு **உள்ளத்தோடு இறைதந்தையை மட்டுமே அன்பு செய்ய வேண்டுமெனக்** கற்பிக்கப்படுகின்றது.

மற்றைய கற்பலகையில் 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய கட்டளைகள் **உன்னைப்போல் உன் அயலானையும் அன்பு செய்ய வேண்டுமென்பதை** நமக்குக் கற்பிக்கின்றன.

இயேசு வாழ்ந்த காலம் தொடக்கம் இந்த பத்துக் கட்டளைகள் அன்பின் கட்டளைகளென அழைக்கப்படுகின்றன.

பிள்ளைகள் : டீச்சர்! எங்களுக்குப் பத்துக்கட்டளைகளைச் சொல்லித் தந்தமைக்காக உங்களுக்கு நன்றி.

ஆசிரியை : இந்தப் பத்துக் கட்டளைகளின்படி வாழ வேண்டுமென்பது இறைவனது விருப்பமாகும்.இறைவன் எங்களை அன்பு செய்வதைப்போல நாமும் அவரை அன்பு செய்ய வேண்டும். அதுவே பிரதி அன்பாகும். நாம் பத்துக் கட்டளைகளின்படி வாழ்வதன் வழியாக இப்பிரதி அன்பைக் காட்டவேண்டும்.



**செபம்**

அன்பின் இறைதந்தையே, பத்துக்கட்டளைகளைப் பின்பற்றி எமது வாழ்வை திருத்தி அமைத்துக் கொள்ளவும் அதன் மூலம் நாம் வாழும் சமூகத்தை நல்வழியில் கொண்டு செல்லவும் எமக்குத் தேவையான தூய ஆவியின் வழிநடத்துதலை தந்தருள வேண்டுகின்றோம்.

ஆமென்.



## ஒப்படை

1. கீழேயுள்ள கட்டங்களில் மறைந்துள்ள இறை கட்டளைகளைத் தேடி அவற்றைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நா | ம் | ந | ல் | ல | பி | ள் | ளை | க | ள் |
| ஆ | வோ | ம் | ஒ | ரே | இ | றை | வ | னை | ம |
| ட் | டு | மே | ஆ | ரா | த | னை | செ | ய் | யு |
| ங் | க | ள் | உ | ண் | மை | பே | சு | வோ | ம் |
| இ | றை | வ | னி | ன் | தி | ரு | நா | ம | த் |
| தி | ற் | கு | ம | ரி | யா | தை | செ | ய் | யு |
| ங் | க | ள் | ஒ | ற் | று | மை | யா | க | வா |
| ழ் | வோ | ம் | ஞா | யி | று | தி | ன | த் | தை |
| தூ | ய் | மை | யா | க | அ | னு | ச | ரி | யு |
| ங் | க | ள் | அ | ன் | பு | செ | ய் | வோ | ம் |

2. மேலுள்ள கட்டங்களில் நல்வாழ்விற்கான முன்மாதிரிகைகள் உள்ளன. அவற்றைத் தேடி பயிற்சிப் புத்தகத்தில் எழுதி அதன்படி வாழ முயற்சி செய்யுங்கள்.

   உதாரணம் : உண்மை பேசுவோம்.

3. மூன்றாவது கட்டளையைக் கடைப்பிடிக்க நீங்கள் செய்ய வேண்டியவற்றை ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

### செயற்பாடு

பத்துக் கட்டளைகளை மனனம் செய்யுங்கள். அதன்படி வாழுங்கள்.



இலவச விநியோகத்திற்காக

# 17 பல்வேறு முறையில் சான்று பகர்வோர்



திருத்தந்தை, அருட்தந்தையர், துறவிகள் அனைவரும் கிறிஸ்துவின் படிப்பினைகளையும் முன்மாதிரிகையையும் பின்பற்றுகின்றார்கள். நாமும் இறையன்பை பெற்றுக்கொள்ள திருச்சபை தலைவர்களுக்கு மரியாதை கொடுத்து அன்புடன் செயற்பட வேண்டும்.

எமது நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளருக்காகவும் வெவ்வேறு நிலைகளில் பணிபுரிபவர்களான வைத்தியர், தொழிலாளர், விவசாயிகள், ஆசிரியர் போன்றோரின் பணிகள் மதிப்புக்கு உரியனவாகும். அவர்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஒழுங்காக நிறைவேற்ற நாம் உதவ வேண்டும்.

கிறிஸ்துவின் அன்பை பெறுவதற்கும் பிறருக்கு அன்பு செலுத்துவதற்கும் கடினமாக உழைக்கும் வேறு நபர்களும் இருக்கின்றனர். சிறிய கிறிஸ்தவக் குழுமத் தலைவர்கள் கிறிஸ்தவ மக்களுக்காக சேவையாற்றுகின்றனர். இவ்வாறாக, இறைவார்த்தையைப் பகிர்ந்தும் ஒன்றாகச் செபித்தும் பொதுப்பணிகளில் பங்குத்தந்தையருக்கு உதவுகின்றனர். எனவே எமக்காகப் பல்வேறு விதத்தில் உழைக்கும் அனைவருக்காகவும் நாங்கள் செபிக்க வேண்டும். சிறுவர்களாகிய நாங்களும் எமது ஆற்றல்களை வளர்ப்பதோடு பிறருக்காகப் பணியாற்ற எம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவைப் பின்பற்றி வாழும் உண்மையான தலைவராவதற்கு நாமும் பழகிக் கொள்வோம்.



**செபம்**

அன்பான இறைதந்தையே, நானும் உண்மையான தலைவனாக உமது அன்புக்கு சான்று பகர்வதற்கு வரமருள வேண்டுகின்றேன்.

ஆமென்.


இலவச விநியோகத்திற்காக

## ஒப்படை

1. உங்கள் பங்குத் தந்தைக்கு நீங்கள் செய்யக்கூடிய கடமைகள் இரண்டு எழுதுங்கள்.
2. கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதி பல்வேறு தலைவர்களுக்குரிய பணிகளை இணையுங்கள்.

| <u>தலைவர்</u> | <u>பணிகள்</u> |
| --- | --- |
| • அருட்தந்தையர் | • மக்களின் கடமைகளை நிறைவேற்றுதல். |
| • நாட்டின் தலைவர்கள் | • ஆசிரியருக்கு உதவுதல். |
| • சிறிய கிறிஸ்தவ குழுமத் தலைவர்கள் | • திருப்பலி ஒப்புக்கொடுத்தல். |
| • வகுப்புத் தலைவர்கள் | • இறைவார்த்தையைப் பகிர்தலும் ஒன்றாகச் செபித்தலும். |

### செயற்பாடு

தற்போதுள்ள திருத்தந்தைக்கு சிறுவர்கள் மீதுள்ள இரக்கத்தையும் கருணையையும் காட்டுகின்ற படங்களைச் சேகரித்துச் சிறியதொரு கையேட்டைத் தயாரியுங்கள்.

# 18 இயேசுவின் சிறிய மலரான புனித சின்னத் திரேசா



உரு 15.1 புனித சின்னத் திரேசா

- ★ எனது பெயர் மாறி பிரான்சுவா திரேசா மாட்டின்.
- ★ நான் பிரான்ஸ் நாட்டில் அலன்சோன் என்னும் நகரில் 1873 ஆம் ஆண்டு தை மாதம் 2 ஆம் திகதி பிறந்தேன்.
- ★ எனது தந்தை லூயிஸ் மாட்டின். எனது தாய் செலின் கெரன். எனக்கு எட்டு சகோதர சகோதரிகள் உள்ளனர். நான் குடும்பத்தில் கடைசிப் பிள்ளை.
- ★ எனது சிறுவயதில் தாய் இறந்து விட்டார். மூத்த சகோதரி கார்மேல் கன்னியர் சபைக்குச் சென்று துறவற வாழ்வைத் தெரிந்துக் கொண்டார்.
- ★ பதினைந்து வயதில் நானும் கார்மேல் கன்னியர் சபையில் சேர்ந்து துறவற வாழ்வைத் தேர்ந்தெடுத்தேன்.
- ★ 1897 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ஆந் திகதி நான் இறைவனடி சேர்ந்தேன்.

இயேசுவின் சிறிய மலராவதற்கு நான் எடுத்த முயற்சிகள்.

- நான் மிகச் சிறிய வேலைகளை அன்போடும் மகிழ்வோடும் நிறைவேற்றினேன்.
- செப, தப, ஒறுத்தல் முயற்சிகள் மூலம் பாவிகளின் மீட்புக்காக உதவி செய்தேன்.



இலவச விநியோகத்திற்காக

- மறைத்தூதுப் பணி செய்த குருக்களுக்காகச் செபித்தேன்.
- எனக்குத் தீமை செய்தவருக்கும் நன்மை செய்தேன்.
- கடுமையாக நோயுற்றபோது எனக்கு ஏற்பட்ட உடல், உள வேதனைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன்.
- எனக்கு காச நோய் ஏற்பட்டது. அப்போது நான் அதிக வேதனைகளை உணர்ந்தேன். ஆயினும் நான் இயேசுவில் கொண்டுள்ள அன்பினால் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தேன்.

இவ்வுலகில் நான் கூறிய இறுதி வசனமானது ''ஆ! இயேசுவே நான் உம்மை அதிகமாக அன்பு செய்கின்றேன்'' என்பதாகும்.

★ ஐப்பசி மாதம் முதலாம் திகதி புனித சின்னத் திரேசாவின் திருநாள் கொண்டாடப்படுகின்றது.
★ இவர் சிறுவர்களினதும் மறைத்தூதுப் பணியாளர்களினதும் பாதுகாவலர் ஆவார்.



## செபம்

அன்பான இறைதந்தையே! இயேசுவின் சிறிய மலராவதற்கு எமக்கு உதவியருளும். நாம் செய்யும் சிறிய செயல்களையும் நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் செய்வதற்கு எமக்கு உதவி செய்தருளும். புனித சின்னத் திரேசாவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். ஆமென்.



## ஒப்படை

1. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியை நிரப்புங்கள்.

(பதினைந்து, அலன்சோன், கார்மேல், லூயிஸ்)

1. புனித சின்னத் திரேசா ................ எனும் நகரில் பிறந்தார்.
2. .....................மாட்டின் புனித திரேசாவின் தந்தை ஆவார்.
3. புனித சின்னத் திரேசா ...................... வயதில் துறவற வாழ்வைத் தேர்ந்தெடுத்தார்.
4. புனித சின்னத் திரேசா ............... துறவற சபையில் சேர்ந்தார்.

2) (அ) பகுதிக்குப் பொருத்தமான விடையை (ஆ) பகுதியிலிருந்து தெரிந்தெடுங்கள்.


| (அ) | (ஆ) |
|---|---|
| • புனித சின்ன திரேசா பிறந்த நாள் | • எட்டு பேர் |
| • அவரின் தாய் | • காச நோய் |
| • குடும்பத்தில் சகோதர சகோதரிகள் | • ஐப்பசி 1ஆந் திகதி |
| • புனித சின்ன திரேசாவிற்கு ஏற்பட்டது | • செலின் கெரன் |
| • இவரின் திருநாள் | • தை 2 ஆந் திகதி |

**செயற்பாடு**

புனித சின்னத் திரேசாவின் பிள்ளைப் பருவம், துறவற வாழ்வு தொடர்பான படங்களைச் சேகரித்து பயிற்சிப் புத்தகத்தில் ஒட்டுங்கள்.


இலவச விநியோகத்திற்காக

# 19 புனித டொமினிக் சாவியோ



உரு 19.1 புனித டொமினிக் சாவியோ

பிறந்தது 1842 சித்திரை மாதம் 2 ஆந் திகதி

நாடு : இத்தாலி
நகரம் : மூர்த்தான
கிராமம் : முறிஅல்டோ

தந்தை : சாள்ஸ் சாவியோ
தாய் : பிறிஜட்

குடும்பத்தில் வசதியின்மையால் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை.இவரின் தாயே இவரது பாடசாலையும் ஆசிரியருமாக இருந்தார்.

பிற்காலத்தில் அருட்தந்தை ஜோன் பொஸ்கோவின் வழிநடத்தலின் கீழ் வளர்ந்தார்.

1857 பங்குனி மாதம் 9 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

இவரது திருநாள் மார்ச் மாதம் 10 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

சிறுவனான புனித டொமினிக் சாவியோவிடமிருந்து நாம் பெறும் முன்மாதிரிகைகள்

- கடுமையான குளிர், களைப்பைப் பாராது தினமும் திருப்பலியில் பங்குபெறல்.
- திவ்விய நற்கருணை ஆண்டவருக்கும் செபத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தல்.
- மரியன்னைக்கு தனது தாயைப் போல அன்பும் மரியாதையும் காட்டுதல்.
- துன்பம், வேதனை, கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளல்.

- உள்ளதைக் கொண்டு மகிழ்ச்சியடைதல்.
- தூய்மை, நேர்மை, தாழ்ச்சி, கருணை, கள்ளமில்லாத் தன்மையை கொண்டிருத்தல்.

**டொமினிக் சாவியோவின் தூய்மையான வாழ்வின் மூலம்**

- முதல் முறையாக நற்கருணை பெறும் பிள்ளைகளின் பாதுகாவலர் ஆவார்.
- பீடப் பணியாளர்களின் பாதுகாவலர் ஆவார்.



**செபம்**

*அன்பான இறைதந்தையே! புனித டொமினிக் சாவியோவைப் போல தாழ்ச்சியுள்ள சிறுவராக வாழ வரம் தந்தருளும்.*

*ஆமென்.*



**ஒப்படை**

1. அடைப்புக்குள் உள்ள சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியை நிரப்புங்கள்.

   (சாள்ஸ் சாவியோ, பங்குனி 10, முறிஅல்டோ, இத்தாலி, தாய்)

   i. சிறிய டொமினிக் சாவியோ பிறந்த நாடு ..............ஆகும்.

   ii. இவர் மூர்த்தான நகரில்............ எனும் கிராமத்தில் பிறந்தார்.

   iii. இவருடைய தந்தை ...................... ஆவார்.

   iv. இவரது ................ இவருக்கு பாடசாலையாகவும் ஆசிரியராகவும் இருந்தார்.

   v. புனித டொமினிக் சாவியோவின் திருநாள் ................ ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

2. புனித டொமினிக் சாவியோவின் வாழ்விலிருந்து நீங்கள் உங்கள் வாழ்வில் பின்பற்ற விரும்பும் நற்பண்புகள் நான்கு எழுதுங்கள்.

**செயற்பாடு**


சிறுவரான புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தேடி வாசியுங்கள்.




இலவச விநியோகத்திற்காக

# 20 மேதகு தோமஸ் கருதினால் குறே ஆண்டகை

இலங்கையின் முதலாவது கருதினால் மேதகு தோமஸ் குறே ஆண்டகை ஆவார். இலங்கைக்கு மாபெரும் சேவையாற்றிய இவர் இறைவனின் அழைப்பைப் பெற்ற பல்வேறு சந்தர்ப்பங்களை ஒழுங்குமுறையாக அறிந்துகொள்வோம்.



உரு 20.1 மேதகு தோமஸ் கருதினால் குறே ஆண்டகை



**அவரது பணிகளில் சில...**

**மக்கொன**

- சிறுவர் இல்லம் ஆரம்பித்தமை
- தொழினுட்பக் கல்லூரி ஆரம்பித்தமை

**தேவத்தை**

- பசிலிக்கா ஆலயத்தை கட்டியமை
- குருக்களுக்கான தியான இல்லத்தை நிறுவியமை

**தம்மிட்ட**

ஆசிரியர் பயிற்சிக்கான மறைக்கல்வி நிலையம் நிறுவியமை

**கல்விக்காக**

குருத்துவ மடங்களிலும் பாடசாலைகளிலும் கத்தோலிக்கக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தமை

**இறை ஆராதனை**

திருப்பலிச் செபங்களை சிங்கள மொழியில் மொழிபெயர்த்தமை

மேதகு தோமஸ் கருதினால் குறே ஆண்டகை அவர்களிடமிருந்து நாம் பெறக்கூடிய முன்மாதிரிகைகள் :

- எளிமை
- இறைவனுக்குக் கீழ்படிதல்
- இறை நம்பிக்கையுடன் நல்ல ஆயனாகப் பணி செய்தல்
- இரக்கத்துடன் பாவிகளை மீட்டல்
- ஏழைகள் மட்டில் இரக்கம் காட்டுதல்
- தமது பணியை இறை மகிமைக்காக அர்ப்பணித்தல்
- செப வாழ்வு



**செபம்**

*அன்பின் தந்தையே, எமக்காக மாபெரும் பணியாற்றிய மேதகு கருதினால் ஆண்டகை அவர்களின் வாழ்விற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். அவரது வாழ்வின் முன்மாதிரிகையைப் பின்பற்றி நாமும் வாழ அருள் புரிந்தருளும்.*

*ஆமென்.*



**ஒப்படை**

1. மறைபற்றுள்ளவராக வாழ்வதற்கு உங்களால் செய்யக்கூடிய செயற்பாடுகள் நான்கு எழுதுங்கள்.
2. கருதினால் குறே ஆண்டகை செய்த ஒரு பணியை எழுதுங்கள்.

# 21 மோசே

முன்னொரு காலத்தில் எகிப்து நாட்டில் புதிய மன்னன் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவரின் பெயர் பார்வோன். அக்காலத்தில் எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்களும் வாழ்ந்து வந்தனர். இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டு மக்களை விட எண்ணிக்கையில் அதிகமாக இருந்ததால் பார்வோன் மன்னன் பயந்தான். எனவே அவன் இஸ்ரயேல் மக்களுக்குப் பிறக்கும் அனைத்து ஆண் குழந்தைகளையும் நைல் நதியில் எறியும்படி ஆணையிட்டான். மேலும் மிகக் கடுமையான வேலைகளைச் செய்வதற்கு இஸ்ரயேல் மக்களுக்கு மன்னன் கட்டளையிட்டான்.



உரு 21.1 மோசே கண்டெடுக்கப்படுதல்

இச்சூழலில் இஸ்ரயேல் இனக் குடும்பத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவர்கள் அக்குழந்தையை மூன்று மாதங்களாக வீட்டிலேயே மறைத்து வைத்து வளர்த்து வந்தனர். தொடர்ந்தும் ஒழித்துவைக்க முடியாததால் குழந்தையைப் பாதுகாப்பான ஒரு கூடையில் வைத்து நைல் நதிக்கரையிலுள்ள நாணல்களுக்கு இடையில் மறைத்து வைத்தனர். அச்சந்தர்ப்பத்தில் நைல் நதிக்கு நீராட வந்த மன்னனின் மகள் அக்கூடையைக் கண்டாள். அவள் அக்கூடையைத் திறந்தபோது ஒரு அழகான ஆண் குழந்தையைக் கண்டாள். அக்குழந்தையை தனது குழந்தையைப் போல் வளர்ப்பதற்கு எடுத்துச் சென்றாள்.

குழந்தை தண்ணீரில் இருந்து எடுக்கப்பட்டதால் அதற்கு ''மோசே'' எனப் பெயரிட்டாள்.


இலவச விநியோகத்திற்காக

அரண்மனையிலே மன்னர்களுக்குரிய சுகபோகங்களை அனுபவிக்கவும் எல்லாக் கலைகளையும் கற்று வளரவும் இறைவன் மோசேயை வழிநடத்தினார். அவர் வேதனைப்படும் தன் இனத்தவருக்காகத் செயற் பட்டதால் நாட்டை விட்டு தப்பியோட நேர்ந்தது. இவ்வாறாகத் தப்பியோடி மிதியான் நாட்டில் வாழ்ந்தார். அங்கு தனது மாமனாரின் மந்தையை மேய்க்கும்போது தீய்ந்து போகாத முட்புதரின் நடுவே தீப்பிழம்பாக இறைவன் மோசேக்குக் காட்சியளித்தார்.



உரு 21.2 மோசேக்கு இறைவன் காட்சியளித்தல்

இறைவன் மோசேயை எகிப்துக்கு மீண்டும் செல்லுமாறு கூறினார். பார்வோன் மன்னனிடம் அடிமைகளாக இருக்கும் இஸ்ரயேல் மக்களை விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு கட்டளையிட்டார். எனினும், பார்வோன் மன்னன் தனது உள்ளத்தைக் கடினப்படுத்திக் கொண்டு இஸ்ரயேல் மக்களைப் புறப்பட்டுச் செல்வதற்கு இடமளிக்கவில்லை. இறைவன் இஸ்ரயேல் மக்களை விடுவிப்பதற்காக எகிப்து நாட்டின் மீது பெருந்துன்பங்களை அனுப்பினார்.

### பத்துப் பெருந் துன்பங்கள்

1. தண்ணீர் இரத்தமாக மாறுதல்
2. தவளைகள்
3. கொசுக்கள்
4. ஈக்கள்
5. கால்நடைகள் சாவு
6. கொப்புளங்கள்
7. கல் மழை
8. வெட்டுக் கிளிகள்
9. காரிருள்
10. தலைச்சன் மகன் சாவு

அதன் பின்னர் மோசே நேர்மையுடனும் அர்ப்பணத்துடனும் இறைவனின் இரக்கத்தினால் இஸ்ரயேல் மக்களை விடுதலைசெய்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றார். அதனால் மோசே இஸ்ரயேல் மக்களின் வீரனாக விளங்குகிறார்.

**மோசேயின் நற்பண்புகள்**

★ இறைவனில் நம்பிக்கை வைத்திருத்தல்
★ இறைவனுக்குக் கீழ்ப்படிதல்
★ தைரியம்
★ மக்களுக்குக் காட்டிய அன்பும் அனுதாபமும்
★ பொறுமை



**செபம்**

அன்பான இறைதந்தையே, என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை மோசேயைப் போல நேர்மையுடனும் தைரியத்துடனும் நிறைவேற்ற என்னை ஊக்கப்படுத்தியருளும்.

ஆமென்.



**ஒப்படை**

1. (அ) பகுதிக்குப் பொருத்தமான விடையை (ஆ) பகுதியிலிருந்து தேர்ந்து எடுத்து இணையுங்கள்.

| (அ) | (ஆ) |
|---|---|
| ● மோசே என்ற பெயரின் அர்த்தம் | ● தவளைகள் |
| ● பார்வோன் மன்னன் இஸ்ரயேல் மக்களுக்கு | ● தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டவன். |
| ● இறைவன் மோசேயை அழைத்தது | ● துன்பங்களைக் கொடுத்தான். |
| ● எகிப்து மக்களுக்கு அனுப்பிய பெரும் துன்பங்களில் ஒன்று | ● முட்புதரின் நடுவே தீப்பிழம்பாக |

2. இறைவன் எகிப்து மக்களுக்கு அனுப்பிய பெரும் துன்பங்கள் ஐந்து எழுதுங்கள்.

# 22 இறைவாக்கினர் சாமுவேல்



உரு 22.1 சாமுவேலின் அழைப்பு

முதல்வர் : முன்னொரு காலத்தில்
அரசர்கள் இல்லாத யுகத்தில்
எப்ராயிம் மலை நாட்டில்
எல்கானா என்ற மனிதர் ஒருவர் இருந்தார்.

அன்னா எனும் அவரது மனைவி
மிகவும் நல்ல பெண்மணியாவாள்
பிள்ளைகள் இல்லாததால் அவர்கள்
இறைவன் முன்னிலையில் தினந்தோறும் மன்றாடினர்.

இடைவிடாது மன்றாடியதன் பலனாக
அவளுக்கு ஒரு மகன் பிறந்தான்
அவள் தமது மகனுக்கு
''ஆண்டவரிடமிருந்து கேட்டேன்'' என்று சொல்லி
சாமுவேல் எனப் பெயரிட்டாள்.

சாமுவேல் தனது தாய்
இறைவன் முன்னிலையில் செய்த
பொருத்தனையின்படி
ஏலி எனும் குருவிடம்
வளர்ந்து வந்தார்.

(கடவுளின் பேழை வைக்கப்பட்டிருந்த ஆண்டவரின் இல்லத்தில் சாமுவேல் படுத்திருந்தான். விளக்கு எரிந்து கொண்டிருந்தது.)

இறைவனின் குரல் : சாமுவேல்! சாமுவேல்!

சாமுவேல் : (குருவான ஏலியிடம் சென்று) இதோ அடியேன். என்னை அழைத்தீர்களா?

குருவான ஏலி : நான் அழைக்கவில்லை. திரும்பிச் சென்று படுத்துக் கொள்.

(சாமுவேல் திரும்பவும் படுத்துக் கொண்டான்.)

இறைவனின் குரல் : சாமுவேல்! சாமுவேல்!

சாமுவேல் : இதோ அடியேன். உண்மையாகவே என்னை அழைத்தீர்களா?

குருவான ஏலி : என் மகனே, நான் அழைக்கவில்லை. திரும்பிச் சென்று படுத்துக்கொள்.

(சாமுவேல் படுத்துக்கொள்கிறான். மீண்டும் சாமுவேல் சாமுவேல் என்ற சத்தம் கேட்கின்றது.)

சாமுவேல் : நீர் என்னை அழைத்தீரா? இதோ உம் அடியேன்.

குருவான ஏலி : உண்மையாகவே இறைவன் சிறுவனை அழைக்கிறார் போலிருக்கின்றது. (தனக்குள்ளயே கூறிக்கொள்கின்றார்.) நீ போய் படுத்துகொள். உன்னை மீண்டும் அழைத்தால் ''ஆண்டவரே பேசும். உன் அடியான் கேட்கிறேன்'' எனக் கூறுவாயாக.

(மீண்டும் சாமுவேல் சாமுவேல் என்ற சத்தம் கேட்கின்றது.)

சாமுவேல் : ஆண்டவரே பேசும், உன் அடியான் கேட்கிறேன்.

இவ்வாறு இறைவனின் பணிக்கு சாமுவேல் அழைக்கப்பட்டார். மீண்டும் மீண்டும் இறைவன் அவருடன் பேசி தனது மக்களை நல்வழியில் இட்டுச் செல்ல அவருக்கு வழிகாட்டினார். சாமுவேலும் இறைவன் முன்னிலையில் தனது மக்களுக்காக பணிபுரிய முன்வந்தார்.


இலவச விநியோகத்திற்காக

இவ்வாறு இறைவாக்கினர் சாமுவேல் போன்று சிறுவயது முதல் நாங்களும் இறைவனின் குரலுக்குச் செவிமடுப்போம். செபிப்பதன் வழியாக இறைதந்தையோடு உறவு கொள்வோம். துன்பங்கள், தடைகள் மத்தியில் நம்பிக்கையோடு வாழ்வோம்.



**செபம்**

*அன்பான இறைவா, சாமுவேலைப் போல உமது குரலொலிக்கு செவிமடுக்கவும் பிறரையும் உமது குரலொலிக்குச் செவிமடுக்கச் செய்யவும் எனக்கு உதவியருளும்.*

*ஆமென்.*




**ஒப்படை**

(1) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைப் பாடத்திலிருந்து தெரிவுசெய்து இடைவெளியை நிரப்புங்கள்.

"ஆண்டவரே பேசும்................ அடியான் ................."

(2) கீழே தரப்பட்டுள்ள புதிரை பூர்த்தி செய்யுங்கள்.




இடமிருந்து வலம்

1. சிறுவயதிலே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்
3. சாமுவேலின் தாய்

மேலிருந்து கீழ்

2. சாமுவேலின் தந்தை

(3) சாமுவேல் போல நீங்களும் பிறருக்காகப் பணிசெய்ய வரம் கேட்டு மன்றாட்டு ஒன்றை எழுதுங்கள்.

(4) சாமுவேலின் அழைப்பைச் சித்திரமாக வரையுங்கள்.

# 23 இறைவாக்கினர் எலியா




உரு 23.1 இறைவாக்கினர் எலியா

முன்னொரு காலத்தில் ஆகாபு என்னும் அரசன் இஸ்ரயேல் மக்களை ஆட்சிசெய்து வந்தான். அவன் மிகவும் கொடூரமாக நாட்டை ஆட்சி செய்தான். அவன் இறைவன் முன்னிலையில் தீமைகளைச் செய்தான். மக்களை இறைவனிடமிருந்து பிரித்துச் செல்லச் செயற்பட்டான். இக்காலகட்டத்தில் இறைவன் என்னை இறைவாக்குரைக்கும் பணிக்குத் தேர்ந்தெடுத்தார். ஆகாபு அரசன் செய்த தீய செயல்களுக்காக, நான் இறைவனின் ஆணைப்படி, நாட்டில் பஞ்சம் ஏற்படச் செய்தேன்.

இறைவன் கூறியவாறு நான் அக்காலத்தில் கெரீத்து எனும் ஓடையருகில் ஒழிந்திருந்தேன். நான் அந்த ஓடையில் தண்ணீர் குடித்தேன். எனது உணவிற்கு எந்தவொரு குறைவும் இருக்கவில்லை. நான் உண்பதற்காக இறைவனின் ஆணைப்படி காகங்கள் காலையிலும் மாலையிலும் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தன.



உரு 23.2 காகங்கள் மூலம் எலியாவுக்கு உணவு வழங்கப்படல்

எனினும் மழை பெய்யாத காரணத்தால் சில நாட்களில் ஓடை வற்றிப்போனது. மீண்டும் இறைவனின் வாக்குப்படி அங்கிருந்து புறப்பட்டு சாரிப்பாத்து நகருக்குச் சென்று அங்கு வாழ்ந்தேன்.

அங்கே இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த கைம்பெண்ணும் அவரது மகனும் வாழ்ந்தனர். அவர்கள் தாம் சாப்பிட இருந்த கடைசி சிறிதளவு மாவினால் அப்பம் சுட்டு தண்ணீருடன் எனக்குக் கொடுத்தனர். இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தமையால் அப்பெண்ணின் பானையிலிருந்த மாவு பஞ்சம் முடியும்வரை குறையவில்லை.

சில நாட்கள் சென்றன. கைம்பெண்ணின் மகன் கடுமையாக நோயுற்றான். அவனது மூச்சு நின்றுவிட்டது. நான் இறைவனிடம் உருக்கமாக மன்றாடினேன். எனது மன்றாட்டுக்கு இறைவன் செவிகொடுத்தார். அப்பெண்ணின் மகனுக்கு மீண்டும் உயிர் பெற்றுக்கொடுத்தேன்.



உரு 23.3 கார்மேல் மலையில் பலி ஒப்புக்கொடுத்தல்

இக்காலத்தில் ஆகாபு அரசனையும் மக்களையும் இறைவன் தம் பக்கம் திருப்புமாறு என்னைப் பணித்தார். எனவே நான் ஆகாபு அரசனை சந்திக்கச் சென்றேன். அவன் செய்த தீமைகளை கூறினேன்.

இஸ்ரயேல் மக்களின் உண்மைக் கடவுள் யார் என்பதை நிரூபிப்பதற்காக கார்மேல் மலையில் இறைவனுக்காகப் பலி ஒப்புக்கொடுத்தேன்.

இந்நிகழ்ச்சியின் பின் தமது இறைவன் உண்மையான கடவுள் என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் மீண்டும் மனம் மாறினர். பஞ்சமும் முடிவடைந்தது. இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே முறிந்த உறவு மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.

**ஒப்படை**

1. சுருக்கமான விடை எழுதுங்கள்.
   - i. இஸ்ரயேல் மக்களை ஆட்சிசெய்த அரசன் யார்?
   - ii. எலியா ஒழிந்திருந்த ஓடையின் பெயர் என்ன?
   - iii. எலியா இறைவனுக்குப் பலி ஒப்புக்கொடுத்த மலை எது?
   - iv. பஞ்ச காலத்தில் எலியாவுக்குக் கிடைத்த உணவு யாது?
   - v. எலியா ஏன் பஞ்சம் ஏற்படச் செய்தார்?
2. இறைவாக்கினர் எலியாவைப் போல இறைவனில் நம்பிக்கை வைத்து செயலாற்ற வரம் வேண்டிச் சிறிய செபம் ஒன்றை எழுதுங்கள்.



இலவச விநியோகத்திற்காக

# 24 அரசனான தாவீது அரசன்

**ஆண்டவர் எனதாயன் (தி.பா - 23)**

**பல்லவி**

ஆண்டவர் எனது ஆயன் - எனக்கு
வேண்டியதொன்றும் இல்லை

**சரணம்**

ஆண்டவர் எனது ஆயன் - எனக்கு
வேண்டியதொன்றும் இல்லை
பசும்புல் மேய்ச்சல் நிலத்தில் - என்னைப்
படுக்கச் செய்கின்றாரே

தேற்றும் நீரருகே எனையழைத்து
புத்துயிர் ஊட்டுகின்றாரே
தம்பெயர் பொருட்டெனை நேரிய வழியில்
நடத்திச் செல்கின்றாரே.

மேலேயுள்ள பாடல் தாவீது அரசன் இறைவனில் அனுபவித்த அன்பையும் வழிகாட்டலையும் பற்றியதாகும். இதில் இறைவனை தமது நல்லாயன் என விபரிக்கின்றார்.



உரு 24.1 தாவீது மந்தை மேய்த்தல்



உரு 24.2 தாவீது யாழ் வாசித்தல்

தாவீது அரசனின் தந்தை ஈசாய் ஆவார். தாவீது அரசனாவதற்கு முன்பு மந்தை மேய்த்து வந்தான். அவன் தனது ஆடுகளுக்கு ஆபத்து வராமல் பாதுகாத்தான். அத்தோடு யாழ் வாசிப்பதிலும் அவன் திறமையானவன்.

அக்காலத்தில் ஆட்சிசெய்த சவுல் அரசன் இறைவனது கட்டளைக்கேற்ப வாழவில்லை. எனவே, இறைவன் இறைவாக்கினர் சாமுவேலை அழைத்து இஸ்ரயேல் மக்களை ஆட்சி செய்வதற்குப் புதிய அரசர் ஒருவரைத் தெரிவுசெய்யுமாறு கூறினார். இதற்காக இறைவனின் திட்டப்படி சாமுவேல் ஈசாயின் புதல்வர்களை அழைத்தார். அவர்களில் இளையவனான தாவீதை இறைவனின் விருப்பப்படி சகோதரர்கள் முன்னிலையில் அரசராகத் திருப்பொழிவு செய்தார்.



உரு 24.3 சாமுவேல் தாவீதை திருப்பொழிவு செய்தல்

**தாவீது அரசனின் நற்செயல்கள்**

- எப்போதும் இறைவனில் நம்பிக்கை வைத்தார். இறைபயமும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்.
- வேறு தெய்வங்களை ஒருபோதும் ஆராதனை செய்யவில்லை.
- தனக்கு முன்பு இருந்த சவுல் அரசனுக்கு இருந்த நோயைத் தனது இனிமையான யாழ் இசையினால் குணமாக்கினார்.

- தனக்கு தீமை செய்தவர்களை மன்னித்தார். தனது பாவங்களுக்காக உண்மையாகவே துக்கப்பட்டார்.



**செபம்**

அன்பின் இறைவா, உம்மில் நம்பிக்கை வைத்து செயற்படவும் எமது திறமைகளினால் பிறருக்குச் சேவை செய்யவும் எமக்குத் தேவையான வரங்களைத் தந்தருளும்.

ஆமென்.



**ஒப்படை**

1. பின்வரும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுங்கள்.

   (சாமுவேல், ஈசாய், மந்தை, யாழ்)

   i. தாவீது அரசனாவதற்கு முன்பு ............................ மேய்த்தான்.

   ii. தாவீதை அரசனாகத் திருப்பொழிவு செய்தவர் ............ ஆவார்.

   iii. தாவீது திறமையாக ....................வாசிப்பார்.

   iv. தாவீதின் தந்தை ............................ ஆவார்.

2. தாவீது அரசனின் கதையில் உங்கள் மனதைக் கவர்ந்த நிகழ்வை சித்திரமாக வரையுங்கள்.

# 25 புனித பேதுரு

## புனித பேதுருவின் அழைப்பு

இயேசு கெனசரேத் ஏரிக் கரையின் அருகில் இருந்தார். ஏரிக்கரையில் இரண்டு படகுகள் இருந்தன. மீனவர் அவர்களின் வலைகளை அலசிக் கொண்டிருந்தனர்.



இயேசு சீமோன் பேதுருவின் படகில் ஏறி மக்கள் கூட்டத்திற்குப் போதித்தார்.








பேதுரு இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து அவரைப் பின்பற்றினார். இதனால் இவர் இயேசுவின் முதல் திருத்தூதராகும் பேறு பெற்றார்.

## மூவிதப் பொறுப்புக்கள்

இயேசு மரித்தோரிடமிருந்து உயிர்த்த பின்பு திருத்தூதருக்குக் காட்சி கொடுத்தார். இவ்வாறு காட்சிகொடுத்த ஒரு சந்தர்ப்பத்தில் பேதுருவிடம் ஒரே விதமான மூன்று கேள்விகளைக் கேட்டார். அதற்கு அவர் அளித்த பதிலின் மூலம் இயேசு பேதுருவிடம் மூன்று பொறுப்புகளைக் கொடுக்கின்றார். இந்த மூவிதப் பொறுப்புகள் திருவிவிலியத்தில் காணப்படுகின்றன. (யோவான் 21:15.17)

**இயேசு முதல் முறையாகக் கேட்டது.**

இயேசு : யோவானின் மகன் சீமோனே நீ இவர்களை விட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே.

இயேசு : **என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்.**

**இயேசு இரண்டாம் முறையாகக் கேட்டது.**

இயேசு : யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே.

இயேசு : **என் ஆடுகளை மேய்.**

**இயேசு மூன்றாம் முறையாகக் கேட்டது.**

**இயேசு** : யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?

**பேதுரு** : ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?

**இயேசு** : **என் ஆடுகளைப் பேணி வளர்.**

பேதுரு இயேசுவை அன்பு செய்ததால் திருச்சபையின் தலைவர் ஆனார். நாமும் இயேசுவின் உண்மையான சீடராவதற்கு அவரை முழு மனதுடன் அன்பு செய்வோம்.

நாமும் நமது குடும்பத்தில், பாடசாலையில் எமக்குள்ள பொறுப்புகளை விருப்பத்துடன் நிறைவேற்றுவோம். அப்பொறுப்புக்களை நேர்மையுடன் நிறைவேற்ற வல்லமை தரும் இறைவனுக்கு நன்றி கூறுவோம். மகிமைப்படுத்துவோம்.

ஆசிரியருக்கு மரியாதை செலுத்தி கீழ்ப்படிவோம்

நன்றாகப் படிப்போம்.

பாடசாலையில் நல்ல தலைவராவோம்.

பிறருக்கு முன்மாதிரிகையாக இருப்போம்.



பெற்றோருக்கு கீழ்ப்படிவோம்.

நல்ல இறை பிள்ளை ஆவோம்.

குடும்பத்தில் அனைவருக்கும் உதவுவோம்.

சகோதர சகோதரிகளை நன்றாகக் கவனிப்போம்.



## செபம்

அன்பான இறைதந்தையே, புனித பேதுருவைப் போல என்னையும் கிறிஸ்தவத் தலைவனாவதற்கு அழைத்ததால் உமக்கு நன்றி கூறுகிறேன். சிறுவனாகிய நான் நல்ல தலைவனாக அனைவருக்கும் அன்புடன் சேவை செய்ய உமது வரங்களைத் தந்தருள வேண்டுகிறேன்.

ஆமென்.



## ஒப்படை

1. கீழே தரப்பட்டுள்ள வசனங்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டன.
   i. "மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்."
   ii."ஆண்டவரே, நான் பாவி நீர் என்னை விட்டுப் போய்விடும்"
   iii.''சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?''

2. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தேவையற்ற எழுத்துக்களை வெட்டி மறைந்துள்ள வசனத்தை தெரிந்து எழுதுங்கள்.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | அ | ன் | அ | ஆ | அ | ட் | அ | டு | அ | க் | அ | கு | அ | ட் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | டி | அ | க | அ | ளை | அ | ப் | அ | பே | அ | ணி | அ | வ | அ |

| | | |
|---|---|---|
| ள | அ | ர் |

3. குடும்பத்தில், பாடசாலையில் நீங்கள் நல்ல தலைவராக செயலாற்றும் முறையை அட்டவணைப்படுத்துங்கள்.

| குடும்பம் | பாடசாலை |
|---|---|
| 1.<br>2.<br>3. | |

### செயற்பாடு

- பேதுருவின் மூவித பொறுப்புக்கள் அடங்கிய சுவரேடு ஒன்றைத் தயாரித்து காட்சிப்படுத்துங்கள்.

## அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணம்

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த, எல்லாம் வல்ல பிதாவாகிய சருவேசுவரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய, நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன். இவர், பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து புனித கன்னிமரியாளிட மிருந்து பிறந்தார். போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத் தில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல பிதாவாகிய சருவேசுவ ரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து சீவியரையும் மரித்தோரையும் நடுதீர்க்க வருவார். பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையை விசுவசிக்கிறேன். புனிதர்களுடைய சமூக உறவை விசுவசிக்கிறேன். பாவப்பொறுத்தலை விசுவசிக்கிறேன். உடலின் உயிர்ப்பை விசுவசிக்கிறேன். நித்திய வாழ்வை விசுவசிக்கிறேன். ஆமென்.

## உத்தம மனஸ்தாபச் செபம்

என் இறைவா! தீயவற்றைத் தெரிந்து, நல்லவற்றைச் செய்யத் தவறி, உமக்கெதிராகவும் என் சகோதர சகோதரிகளுக்கு எதிராகவும் செய்த பாவங்களுக்காக மனம் வருந்துகின்றேன். உமது அன்பினாலும் அருளினாலும் இனிமேலும் பாவம் செய்யாதிருக்கவும் பாவச் சூழ்நிலைகளைத் தவிர்க்கவும் உதவி செய்தருளும். எனது பாவங்களை மன்னியும் இறைவா. ஆமென்.

## காலைச் செபம்

அனைத்தையும் படைத்து ஆட்சிசெய்யும் எல்லாம் வல்ல இறைவனே! உமது இரக்கத்தை வேண்டி நான் பெற்றுக்கொண்ட எல்லா உபகார உதவிகளுக்காகவும் விசேடமாகக் கடந்த இரவு என்னைப் பாதுகாத்தமைக்காகவும் உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றேன். இன்றைய நாளிலே உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து நடக்க வாக்குப் பண்ணுகிறேன். எனது சிந்தனை, சொல், செயல்கள் யாவையும் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கிறேன். உம்மை நான்

என்றும் அறியவும் உம்மீது அன்பு கொள்ளவும் உமக்குப் பணிபுரியவும் உம்மோடு விண்ணில் நான் என்றென்றும் இன்புற்றிருக்கவும் உதவி செய்தருளும். ஆமென்.

## இரவுச் செபம்

சருவேசுவராசுவாமி, எம்மை மீட்டு இரட்சித்த இயேசுவே, தேவரீர் இன்று எனக்குச் செய்த சகல உதவிகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். இன்றைய நாளிலே நான் செய்த சகல தவறுகளையும் பொறுத்தருளும். இந்த இரவிலே சடுதி மரணத்திலும் துர்க்கனவு முதலான பிசாசின் சோத னைகளிலும் விழவிடாமலும் எனது உடலுக்கும் உயிருக்கும் எந்தவொரு தீமையும் இல்லாமலும் காத்துக்கொள்ளும். உம்மோடு அடியேன் நித்தியமாய் இருக்கவும் கிருபை செய்தருளும் சுவாமி. ஆமென்.

## மூவேளைச் செபம்

முதல்வர் : ஆண்டவருடைய தூதர் மரியாளுக்கு தூதுரைத்தார்.

பதில் : அவள் தூய ஆவியினாலே கருத்தரித்தாள்.
*அருள் நிறைந்த மரியே....*

முதல்வர் : இதோ ஆண்டவருடைய அடிமை.

பதில் : உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்.
*அருள் நிறைந்த மரியே....*

முதல்வர் : வார்த்தை மனுவுருவானார்.

பதில் : நம்மிடையே குடிகொண்டார்.
*அருள் நிறைந்த மரியே....*

முதல்வர் : இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களாக இருக்கும்படியாக

பதில் : இறைவனின் புனித அன்னையே எங்களுக்காக மன்றாடும்.

**செபிப்போமாக**

இறைவா, உமது திருமகன் கிறிஸ்து மனுவுருவானதை உமது வானதூதர் வழியாக அறிந்திருக்கின்றோம். அவருடைய பாடுகளாலும் சிலுவையினாலும் உயிர்ப்பின் மகிமையை அடையுமாறு உமது அருளை எங்கள் உள்ளத்தில் பொழிய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

*(திரித்துவப் புகழை மூன்றுமுறை சொல்லவும்)*

## பாஸ்கு காலத்து மூவேளைச் செபம்

(அல்லேலூயா சனிக்கிழமை தொடக்கம் தூய ஆவியின் திருநாள் வரை)

முதல்வர் : விண்ணக அரசியே மனங்களிகூரும் - அல்லேலூயா

பதில் : ஏனெனில் இறைவனை கருத்தாங்க பேறுபெற்றீர். - அல்லேலூயா

முதல்வர் : தாம் சொன்னபடியே அவர் உயிர்த்தெழுந்தார். - அல்லேலூயா

பதில் : எங்களுக்காக இறைவனை மன்றாடும். - அல்லேலூயா

முதல்வர் : கன்னி மரியே! அகமகிழ்ந்து பூரிப்படைவீர். - அல்லேலூயா

பதில் : ஏனெனில் ஆண்டவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்தார் - அல்லேலூயா

**செபிப்போமாக**

இறைவா, உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பினால் உலகம் களிகூரத் திருவுளமானிரே, அவருடைய திருத்தாயாராகிய புனித கன்னி மரியாளின் துணையால் நாங்கள் என்றும் நிலையான பேரின்ப வாழ்வைப் பெற அருள்புரிய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

*(திரித்துவப் புகழை மூன்றுமுறை சொல்லவும்)*